## இளைய தீர்க்கதரிசிகள் : வரலாற்றுப் பின்னணி

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவனுக்காக மிகவும் புரட்சிகரமாக இருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் அதிகப்படியாக இந்த தீர்க்கத்தரிசிகளால் எழுதப்பட்டது. நீண்ட ஆகமங்களை எழுதியவர்களை பெரிய தீர்க்கதரிசிகள் என்றும், குறுகிய ஆகமங்களை எழுதியர்வகளை இளைய தீர்க்கதரிசிகள் என்றும் நாம் அழைக்கிறோம்.

எபிரெய பாஷையில் தீர்க்கதரிசி என்ற வார்த்தையின் விளக்கம் :

ரோயோ – 11 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. பார்ப்பது என்று அர்த்தம்.
கோழே – 22 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனிடத்திலிருந்து தரிசனம் பெற்ற மனிதன்.
நபி – ஏறக்குறைய 300 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அறிவிப்பவர் அல்லது தேவனுக்கே பேசுபவர் என்று அர்த்தம்.

மக்களிடம் தேவ வார்த்தையை குறித்து பேசியவர்களும் எழுதியவர்களுமே தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்பட்டார்கள். தேவனுடைய மனிதர்கள் என்று அவர்களை கூறுகிறோம். அவர்கள் தங்கள் சுய ஜனங்களின் தேவைகளைப் பற்றியும் பாவத்தைக் குறித்தும் கண்டித்து பேசினார்கள். அவர்களுடைய செய்திகள் மேசியாவின் வருகையைப் பற்றியும் இருந்தது.

சில நேரங்களில் அவர்களுடைய செய்திகளை சின்னங்களின் மூலமாக வெளிப்படுத்தினார்கள் இளைய தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் எழுதப்பட்ட நேரத்திற்குள்ளாக, இஸ்ரவேலில் பல நல்ல சம்பவங்களும், கெட்ட சம்பவங்களும் நடந்திருந்தது.

வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வந்த பிறகு இஸ்ரவேல் தேசம் பல கோத்திரங்களாக பிரிக்கப்பட்டது. அதன் பின் நியாயதிபதிகளால் 400 ஆண்டுகள் நடத்தப்பட்டார்கள். இதன் பின் சவுல், தாவீது மற்றும் சாலமோன் 120 ஆண்டுகள் அரசாண்டார்கள் (ஒவ்வொருவரும் 40 ஆண்டுகள் அரசாண்டார்கள்)

சாலமோன் மரித்த உடனே இஸ்ரவேல் இராஜ்ஜியம் இரு வேறுபட்ட எதிர் இராஜ்ஜியங்களாக பிரிந்து விட்டது. இந்த காலகட்டத்தில்தான் இளைய தீர்க்கதரிசன ஆகமங்கள் எழுதப்பட்டது. (கி.மு. 900 – கி. மு. 400)

### அக்காலத்தின் வரலாற்று பூர்வமான மற்ற தேசங்கள்

**(1) எகிப்து :**

யூதா மற்றும் இஸ்ரவேல் தேசம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் (கி.மு. 1500) சர்வ அதிகாரமும் எகிப்த்திடம் இருந்தது. எகிப்தியர்கள் சர்வ அதிகாரத்தை அநேக நூற்றாண்டுகளாக தக்கவைத்திருந்தார்கள்.

**(1) எகிப்து :**

யூதாவின் பிரிவினையின் போது. சர்வ அதிகாரம் அசீரியாவிடம் இருந்தது. கி.மு. 722 ல் அசீரியா இஸ்ரவேலை (வடராஜ்யத்தை) சிறைப்படித்தது. இளைய தீர்க்கத்தரிசிகளான ஒபதியா, யோவேல், யோனா, ஓசியா, ஆமோஸ், மீகா, நாகூம் மற்றும்



**(1) எகிப்து :**

யூதா மற்றும் இஸ்ரவேல் தேசம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் (கி.மு. 1500) சர்வ அதிகாரமும் எகிப்த்திடம் இருந்தது. எகிப்தியர்கள் சர்வ அதிகாரத்தை அநேக நூற்றாண்டுகளாக தக்கவைத்திருந்தார்கள்.

**(1) எகிப்து :**

யூதாவின் பிரிவினையின் போது. சர்வ அதிகாரம் அசீரியாவிடம் இருந்தது. கி.மு. 722 ல் அசீரியா இஸ்ரவேலை (வடராஜ்யத்தை) சிறைப்படித்தது. இளைய தீர்க்கத்தரிசிகளான ஒபதியா, யோவேல், யோனா, ஓசியா, ஆமோஸ், மீகா, நாகூம் மற்றும் செப்பனியா, இந்த காலகட்டத்தில் தான் பிரசங்கித்து எழுதினார்கள், (இதில் யோவேல் மற்றும் ஒபதியாவின் காலகட்டத்தை மட்டும் குறிப்பது மிகவும் கடினம்)

**(3) பாபிலோன் :**

அசீரியர்களை பாபிலோன் தோற்கடித்து சர்வ அதிகாரத்தை பறித்துக் கொண்டது இந்த காலகட்டத்தில்தான் ஆபகூக் புத்தகம் எழுதப்பட்டது. கி.மு. 586ல் பாபிலோனியர்கள் யூதாவை (தென் இராஜியத்தை) தோற்கடித்து தேவலாயத்தை சேதப்படுத்தினார்கள்.

## இளைய தீர்க்கதரிசிகளின் தொகுப்பு

| காலம் | தீர்க்கதரிசி | அர்த்தம் (பெயர்) | ஆய்வு | எதற்கு / எதைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது | விசாரிக்கப்பட்ட பெரிய பாவங்கள் |
|---|---|---|---|---|---|
| கிமு 840 லிருந்து 830 வரை | ஒபதியா | கர்த்தரை வழிபடுபவர் | தேவனுடைய நாள் ஏதோமின் அழிவு இஸ்ரவேலின் மீட்பு | ஏதோமுக்கு விரோதமாக | ஏதோம் இஸ்ரவேலுக்கு விரோதமாக வன்முறையை வளர்த்தான். யூதா சிறை பிடிக்கப்பட்டபோது களிகூர்ந்தான் |
| கிமு 830 லிருந்து 750 வரை | யோவேல் | கர்த்தரே தேவன் | தேவனுடைய நாள் | இஸ்ரவேல், வட இராஜ்ஜியம் | வேசித்தனம், மதுபானப் பிரியர்கள், விக்கிரக ஆராதனை சிற்றின்பப் பற்றுகள் |
| கிமு 780 லிருந்து 740 வரை | யோனா | புறா | அர்ப்பணிப்பின் அடையாளம், இயேசு கிறிஸ்துவின் குணம், மனத்திரும்புதலுக்கு தேவனின் இரக்கம் | நினிவே, எல்லா மக்களுக்கும் சம்பந்தமான | அசீரியரின் கொடூர குணம் |
| கிமு 765 லிருந்து 720 வரை | ஒசியா | இரட்சிப்பு | இரட்சிப்பு | இஸ்ரவேல், வட இராஜ்ஜியம் | வேசித்தனம், மதுபானப் பிரியர்கள், விக்கிரக ஆராதனை, சிற்றின்பப் பற்றுகள் |
| கிமு 760 | ஆமோஸ் | சுமைதாங்கி | தேவனுடைய நாள் நித்தியத்தின் முழக்கம் | இஸ்ரவேல், யூதா மற்றும் பென்யமீன் மற்ற தேசங்கள் | தரித்திரர் ஒடுக்கப்பட்டது விபச்சாரம் ; பொறுப்பற்ற இன்பவாழ்க்கை, நியாயப்பிரமாணம் மற்றும் மனிதரின் சீர்குலைவு |
| கிமு 740 லிருந்து 700 வரை | மீகா | கர்த்தரைப் போல் யார்? | நித்தியமானது நேர்த்தியான தீர்ப்பு | சமாரியா, எருசலேம் மற்றும் முழு உலகம் | நாட்டின் நேர்மையின்மை, அநீதி, கொடுங்கோல் ஆட்சி |
| கிமு 640 லிருந்து 620 வரை | நாகூம் | ஆறுதல் | நினிவேயின் மேல் நியாயத் தீர்ப்பு, இஸ்ரவேலுக்கு ஆறுதல் | அசீரியர்கள் முக்கியமான நினிவே பட்டணத்திற்கு | அசீரியரின் கொடூரகுணம் எல்லையைக் கடந்த செயல்கள் |



| காலம் | தீர்க்கதரிசி | அர்த்தம் (பெயர்) | ஆய்வு | எதற்கு / எதைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது | விசாரிக்கப்பட்ட பெரிய பாவங்கள் |
|---|---|---|---|---|---|
| கிமு 640 லிருந்து 609 வரை | செபனியா | கர்த்தரால் மறைத்து வைக்கப்பட்டவன் | தேவன் பூமியின் மேல் கொண்ட கடுங்கோபம் யாரால் மறைந்திருக்க முடியும்? இஸ்ரவேலின் மனமாற்றமும் தேவனுடைய இரட்சிப்பும் | யூதா, எருசலேம், இஸ்ரவேலர் மற்றும் எலலா மக்களுக்கும் தேவனின் வருகையைக் குறித்த எச்சரிக்கை | ஆத்மீக பலவீனம் |
| கிமு 608 லிருந்து 605 வரை | ஆபகூக் | மேற்கொள் | கல்தேயரை முறியடித்ததின் மூலம் யூதாவை தேவன் தழுவினார் | பாபிலோன், எல்லா மக்களுக்கும் சம்பந்தமான | ஆக்கிரமிப்பு / கொள்ளை, பேராசை / சுயஉரிமை, வன்முறை வளர்ச்சி, மிருகத்தனம், விக்கிரக ஆராதனை |
| கிமு 520 | ஆகாய் | விமா | சபையான ஆலயத்தின் மீட்பு விவரங்கள் | செருபாபேல், யோசுவா மற்றும் மீட்கப்பட்டவர்களின் வருகை | தேவனுடைய வீட்டைக் கட்டுவதில் புறக்கணிப்பு |
| கி.மு. 520 லிருந்து 480 வரை | சகரியா | தேவனால் நினைவு கூறுபவர் | ஆலயத்தை கட்டுவதன் மூலம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் வருகையைத் தெரிவிப்பது | செருபாபேல் யோசுவா மற்றும் மீட்கப்பட்டவர்களின் வருகை | யோசுவாவின் அறுவறுப்பான ஆடைகள், நீதியானதீர்ப்பின்மை, இரக்கம் மற்றும் சமாதானம், துன்மார்க்கமான விதத்தில் வாழும் வாழ்க்கை |
| கிமு 420லிருந்து 400 வரை | மல்கியா | என்னுடைய தூதன் | தூதனுடைய வருகைக்கு தயாராக இருப்பது (எலியா) | இஸ்ரேல் (12 கோத்திரங்கள்) தேவனுடைய இன்றைய இஸ்ரவேல் (சபை) | ஆசாரியர்கள் பணியைப் புறக்கணித்தது, மக்களின் தள்ளிவிடுதலுக்கு கண்டிப்பு, வேசித்தனம், தேவனை வஞ்சித்து குறை கூறுவது |

<u>அறிமுகவுரை :</u>

- ஓசியா வடதேசங்களுக்கு (இஸ்ரவேல்) தீர்க்கதரிசனம் சொல்ல அழைக்கப்பட்டார்.
- ஓசியா 40 வருடங்கள் ஊழியம் செய்தார். (கி.மு. 700 முதல் கிமு 720 வரை) இஸ்ரவேல் தேசம் அதின் பாவத்தினால், ஒரு மோசமான நிலையில் இருந்தது.
- இஸ்ரவேல் ராஜாக்கள் அனைவரும் பொல்லாதவர்கள், ஏனெனில் அவர்கள் அனைவரும் சிலை வழிப்பாட்டை தொடர்ந்து பின்பற்றினார்கள்.
- ஆனாலும் இந்த பாவம் நிறைந்த சமயத்தில்தான், ஓசியா தேவன் இஸ்ரவேலின் மேல் வைத்த அன்பை உரைக்கிறார். தேவனின் அன்பின் ஆழத்தை ஓசியா புஸ்தகத்தில் தெளிவாக பார்க்கலாம்.
- ஓசியா கோமேருடன் வைத்திருந்த உறவுமுறையை தேவன் இஸ்ரவேலுடன் வைத்திருந்த உறவு முறையோடு ஒப்பிட்டு காட்டப்பட்டிருப்பதை அதிகாரம் 1 முதல் 3 வரை பார்க்கலாம். இத்தகைய அன்பை புறக்கணிப்பதால் நேரிடும் நாசமான முடிவை அதிகாரம் 4 முதல் 14 வரை பார்க்கலாம்.

<u>இஸ்ரவேலுடன் தேவனின் திருமணம் (ஓசியா 1:1 – 3:5)</u>

இங்கு ஓசியா மற்றும் கோமேரை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் ஓசியாவிடமிருந்து மிகப்பெரிய விசுவாசத்தை எதிர்ப்பார்த்தார் (1 : 2 -3) ஒழுங்கீனமான மனைவி திருமணத்திற்கு முன்பாகவே ஒரு வேசியாக இருந்தாள். இஸ்ரவேலினால் தேவன் எவ்வளவு மனவேதனைப் பட்டிருக்கிறார் என்பதை இதன் மூலம் காட்டுகிறார். இஸ்ரவேல் தேசம் தேவனோடு திருமணம் செய்து கொண்டது. ஆனாலும் அந்த உறவுமுறையில் இஸ்ரவேல் உண்மையாக நடந்து கொள்ளவில்லை. ஆவிக்குரிய வேசித்தனமானது சிலை வழிப்பாட்டிற்கு ஒப்பிடப்பட்டு, வெவ்வேறு வகையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

- சிலை வழிபாடானது, உருவங்களை செய்து அவைகளை வணங்குவது.
- சிலை வழிப்பாட்டில், வேசித்தனத்தை கொண்ட பெண் தெய்வங்களையும் வணங்கினர்.
- பொருளாசை மற்றொரு வகையான சிலைவழிபாடு
- தேவனை நம்பி வாழ்ந்ததும், பிறதேசங்களை நம்பி வாழ்ந்ததும், சுயபலத்தை நம்பி வாழ்ந்தாலும் ஒரு வகையான சிலை வழிபாடு.

கோமேர் ஓசியாவை விட்டு சென்ற பிறகும், (அதி 3) அவளை விலை கொடுத்து வாங்கும் படி தேவன் கேட்டுக்கொண்டார். இஸ்ரவேல் தேவனுக்கு உண்மையற்று போனாலும், அவளை தன மனைவியாக மீண்டும் ஏற்றுகொள்ள தயங்கவில்லை. தேவனின் மன்னிக்கும் மனப்பாண்மை மிகவும் ஆச்சரியமானது.

எந்த வகையான சிலைவழிபாடு நம் வாழ்க்கையில் உள்ளது? தேவன் மீது நம்பிக்கை வைக்காமல், நம் சுய பலத்திலோ அல்லது நம் தலைவர்களையோ சார்ந்து வாழ்கிறோமோ? நம் இருதயத்தில் பணம் எந்த நிலையில் உள்ளது? தேவனோடு நாம் கொண்ட உறவு அவருக்கு சந்தோஷம் கொடுப்பதாக இருக்கின்றதா அல்லது மனக்கவலை கொடுப்பதாக இருக்கின்றதா? தேவன் நம்மை அன்பு செய்கிறார். நம்மோடு நெருக்கமான உறவு வைத்துக் கொள்ள விரும்புகிறார்.

<u>செயல் முறை</u> : உங்கள் வாழ்க்கையில் சமீபத்தில் நடந்த கஷ்டமான அனுபவத்தை எழுதி, அதிலிருந்து எப்படி மீண்டு வந்தீர்கள் என்று எழுதவும்.



மரணமானாலும் ஜீவனானாலும் தேவ தூதர்களானாலும் அதிகாரங்களானலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் - ரோமர் 8 : 38-39



<u>இஸ்ரவேலுக்கு எதிராக தேவன் (ஓசியா 4 : 1-1-9)</u>

தீர்க்கதரிசிகள் மூலமாக அனேக எச்சரிக்கை விடுத்த பிறகு, தேவன் இஸ்ரவேலரை சிட்சிக்க முடிவு எடுத்தார். இஸ்ரவேலருக்கு விரோதமாக தேவனின் குற்றச்சாட்டு

- உண்மையில்லை, அன்பில்லை (வ.1)
- பொய்யாணை, பொய், கொலை, திருட்டு, விபச்சாரம் (வ-2)
- தேவனைப்பற்றும் அறிவு இல்லை (வ.6)
- ஆசாரியர்கள் (தலைவர்கள்) வேதத்தை மறந்தனர் (வ.6)
- சிலைவழிபாடு (வ.12)

நாம் மனம்திரும்புவோம் என்ற நம்பிக்கையில், தேவன் முதலில் அன்பாக சொல்லிப் பார்க்கிறார். நாம் மறுத்தால் நம்மை சிட்சிக்கிறார்.

சிட்சைக்கும் இஸ்ரவேலர் செவிகொடுக்கவில்லை. எனவே தேவன் இஸ்ரவேலை நியாயம் தீர்க்கிறார். சிட்சைக்கு பிறகு நியாயத்தீர்ப்பு.

நாம் நிலைமை மோசமாவதற்கு முன்னமே மனம் திரும்புகிறோமா? அல்லது மோசமான நிகழ்ச்சி நடந்தால்தான் மனந்திரும்புகிறோமோ? வாழ்க்கையில் அடிபட்டு கற்றுகொண்ட சில பாடங்கள் என்ன?

<u>இஸ்ரவேலுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு (ஓசியா 5 : 1 – 15)</u>

- இஸ்ரவேல் திரும்பிவராத நிலையை அடைந்தனர் (வ.4)
- அதிக அகந்தை உள்ளவர்களாக மாறினார்கள் (வ.5)
- தேவன் அவர்களை விட்டு விலகினார் (வ.6)
- தங்கள் குற்றங்களை உணர்ந்து மனம்திரும்பும் படி தேவன் எதிர்பார்க்கிறார். (வ.5)

தேவனிடத்தில் திரும்புவதே மனம்திரும்புதல் குற்றங்களை உணர்ந்து அவரை தேடுவது.

மனந்திரும்பபோவதில்லை என்ற நிலையை அடைந்து விட்டோமோ? தேவனின் சிட்சையை அசட்டை பண்ணுகிறோமா? தேவனிடம் திரும்புவதே சிறந்தது, ஏனெனில் அவர் நம்மை குணப்படுத்தி, மீண்டும் நிலைபடுத்துகிறார். இப்படிப்பட்ட இஸ்ரவேலரையையே மன்னிக்கும் அளவிற்கு தேவனின் கிருபையும், இரக்கமும் பெரிது.

<u>செயல்முறை</u> : மனம் திரும்ப எது தூண்டுகிறது?

அல்லது தேவ தயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை

அசட்டைபண்ணுகிறாயோ? உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்து கொள்ளுகிறாயே – ரோமர் 2 : 4–5

---

ஓசியா புத்தகம் (ஓசியா 6–7) நாள் 3

---

<u>இஸ்ரவேல் மனம் திரும்பான்மை (ஓசியா 6 : 1–7 : 16)</u>

தம்முடைய மன்னிக்கும் குணத்தையும், இரக்கத்தையும் சார்ந்து வாழும்படி தேவன் எதிர்பார்க்கிறார்.

இஸ்ரவேலர் தேவனிடமாய் திரும்பவேண்டுமென்று தேவன் மன்றாடுகிறார். தேவனின் மன்னிக்கும் மனப்பான்மையை விவரிக்க பயன்படுத்தப்படும் வார்த்தைகளை கவனியுங்கள்.

- அவர் நம்மை குறப்படுத்துவார் (வ.1)
- நம் காயங்களைக் கட்டுவார் (வ.1)
- அவர் நம்மை உயிர்ப்பிப்பார் (வ.2)
- அவர் நம்மை எழுப்புவார் (வ.2)
- அவருடைய சமூகத்தில் பிழைத்திருப்போம். (வ.2)

ஆனால் இஸ்ரவேலோ மாறுவதாக தென்படவில்லை தேவன் சொன்னார், பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன். இந்த வசனத்தை பரிசேயருக்கு இயேசு காண்பித்தார். அவர்களுடைய ஆத்மீகம் தேவனுக்கு பிடித்தததாக இல்லை. நாம் ஆத்மீகவாதிகளாக இருப்பதை விட அன்புள்ளவர்களாக இருக்கவே தேவன் விரும்புகிறார்.

இஸ்ரவேல் மனந்திரும்பாததினால் நியாயந்தீர்க்கப்பட்டார்கள் (வ.11) தேவன் அவர்களின் பொல்லாப்பை எல்லாம் நினைவில் வைக்கிறார். (வ.7 :2) சில நேரம் தேவன் நம் பாவங்களை மறந்து விடுவார் என்று நினைக்கிறோம். வேதன் நம் பாவங்களுக்குத் தக்க தண்டனை தருகிறார் என்று வசனம் சொல்கிறது.

நம் பாவங்களை நாம் மறைத்து விடலாமென்று நினைக்கும்போது பாவம் நம்மை வஞ்சிக்கிறது. ஆனால் நம் பாவத்தை மறைக்க முடியாது. படைப்புக்களெல்லாம் தேவன் பார்வைக்கு நிர்வாணமாய் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றும் இல்லை. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இயேசுவின் மூலமாக தேவனிடத்திற்கு வந்து மனந்திரும்புவது நியாயந்தீர்ப்பிலிருந்து தப்பிக்க வழி.

தேவன் இஸ்ரவேல் மக்களை திருப்பிப்போடாத தோசைக்கு ஒப்பிடுகிறார். (வ. 7:8) இது சரியாக வேகாத அல்லது முதிர்ச்சியடையாத நிலையைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

தேவன் இஸ்ரவேல் மக்களை பேதையான புறாவிற்கு ஒப்பிட்டு சொல்கிறார். அது எந்த அளவிற்கு சுலபமாக வஞ்சிக்கப்பட்டு பாவம் செய்யப் போகிறது என்பதைக் காண்பிக்கிறது. தேவன் அவர்களை இரட்சிக்க ஏங்குகிறார். (வச. 13)

நாம் சுலபமாக வஞ்சிக்கப்படுகிறோமோ? நாம் சுலபமாக கெட்டுப்போகின்றோமா? நமக்கு உதவி தேவைப்படும் போது எங்கு சொல்கிறோம்? வாருங்கள் நாம் தேவனிடத்திற்குத் திரும்புவோம் அவர் நம்மைக் குணமாக்குவார் !

<u>செயல்முறை</u> : நீங்கள் மாற முடியாதபடி உங்கள் வாழ்க்கையில் ஏதாவது பாவம்



நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் – யோவான் 1 : 9

---

ஓசியா புத்தகம் (ஓசியா 8) நாள் 4

---

<u>சூறாவளிக்காற்றை அறுப்பது (ஓசியா 8 : 1– 14)</u>

கடவுளை மறந்து நம்முடைய வருமானத்தையும் ஆதாரங்களையும் நம்பி வாழ்ந்தால் அது கடைசியில் அழிவில் வந்து முடியும்.

இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்தது (வ : 14) மறந்து விடுவது என்றால் தேவனை “உதாசினப்படுத்துவது” தேவன் அவர்களுடைய வாழ்க்கையில் முதலிடத்தில் இல்லை.

தேவனை மறந்ததினால் வந்த ஐந்து பாவங்கள் :

தேவ உடன்படிக்கையை மீறியது, (வ –1–3): உடன்படிக்கையென்றால் ஒப்பந்தம் செய்தல் உடன்படிக்கையை முறிப்பது என்றால் தேவனுடைய இருதயத்தை முறிப்பது.

தேவனுக்கு விருப்பமில்லாததை செய்தல் (வ – 4): தேவனை கேட்காமல் தலைவர்களை (இராஜாக்களை) ஏற்படுத்தினார்கள், அவர்கள் தங்கள் பாவத்தினாலும், புத்தியீனத்தினாலும் தெரிந்து கொண்டார்கள். மனிதனின் உட்புறத்தை நாம் காண முடியாது. வெளிப்புறத்தை மட்டுமே காண முடியும் தேவன் மக்களின் இருதயங்களை அறிந்திருக்கிறார். பாவமுள்ள தலைவர்களை தேர்ந்தெடுப்பதின் மூலமாக வழிநடத்துதலும் கெட்டுப்போய்விடுகின்றது.

சிலை வழிபாடு (வ 4–6) : கெட்ட தலைவர்கள் ஆத்மீகத்தை அழிக்கின்றனர். கன்றுக் குட்டியை வழி படுவதை தேவன் கடுமையாக எதிர்த்தார்.

புற தேசத்தோடு உறவு (வ 8–10): அவர்கள் தனித்து திரிகிற காட்டுக் கழுதையைப் போல் அசீரியரண்டைக்குப் போனார்கள். மீட்பரும் உதவியாளருமான தேவனிடத்தில் திரும்ப மறந்தனர்.

பாவமான பலிபீடங்கள் ஏற்படுத்துதல் (வ 11–13): அவர்களுடைய தண்டனைக்கு அவர்களே பொறுப்பு என்று தேவன் சொல்கிறார். அவர்கள் காற்றை விதைத்து, சூறவாளியை அறுப்பார்கள்.

எதை நாம் விதைக்கிறோம்? தேவனை முதலிடத்தில் வைக்கிறோமா? ஆபத்துக் காலத்தில் தேவனிடத்திற்கு திரும்புகிறோமோ? தேவனோடு வைத்த உடன்படிக்கையை காத்துக் கொள்வோம்.

<u>செயல்முறை</u> : கிறிஸ்துவர்களுக்காகவும், தலைவர்களுக்காகவும் ஜெபியுங்கள், மனச்சாட்சியோடும், நேர்மையோடும் வாழ ஜெபியுங்கள்.

தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து அவர்களுடைய விசுவாசத்தையும் பின்பற்றுங்கள் .... எபிரேயர் 13 : 7 – 9

இஸ்ரவேலுக்கு தண்டனை (ஓசியா 9 : 1-10, 15): அறுவடை விழாக்களின் சமயத்தில் ஓசியா ஒரு அறிவிப்போடு வருகிறான், அவர்கள் விருந்து நடனம் என்று மகிழ்ந்திருந்தனர். தேவனுடைய செய்தியை (வ 9 : 1-5) நினைத்துக்கூட பார்க்கவில்லை, அது ஒரு தெளிவான செய்தி அவர்கள் தேவனை கைவிட்டதால், தேவன் அவர்களைக் கைவிட்டார்.

ஒன்பதாவது அதிகாரத்தின் இரண்டாவது பகுதி நியாயத்தீர்ப்பு வருவதின் நிச்சயத்தை சொல்கிறது. வரப்போகின்ற அழிவைக் குறித்து தெளிவாகவும் உருக்கமாகவும் ஓசியா எடுத்துரைக்கிறான். ஆனால் மக்களோ அவன் முட்டாள் என்று நினைத்து ஏளனம் செய்கின்றனர். (9 : 7-8)

பாவம் நம்மை தேவனை விட்டுப் பிரிக்கின்றது. பிரிக்கப்பட்ட பிறகு ஆத்மீகமான நோக்கம் எடுக்கப்பட்டு விடுகிறது. அதன் பிறகு ஆத்மீகத்தில் குருடராகவும் செவிடராகவும் மாறுகின்றோம். தேவன் நம்மை விட்டுப் பிரிந்தால் நாம் நம்பிக்கையின்றி விடப் படுவோம்.

அதிகாரம் பத்தில் இஸ்ரவேல் மக்கள் ஒரு திராட்சை செடிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பலனற்ற திராட்சை செடி என்று வேதம் நிரூபிக்கிறது. தேவன் விரும்பும் கனியை அது கொடுக்கவில்லை.அது சிலை வழிபாட்டை கனியாக கொடுத்தது.

அவர்கள் இருதயம் பிரிக்கப்பட்டிருக்கிறது (வ2) அதாவது ஏமாற்றப்பட்டிருக்கிறது. அவர்கள் நோக்கமும் செயல்களும் மாறுப்பட்டதாக இருந்தது.

திருமண உறவுபோல, நாம் உண்மையாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். இஸ்ரவேல் மக்கள் யேகோவாவே தேவன் என்றும் அவரையே ஆராதிக்கின்றோம் என்று சொல்லியும், பொய்யான பலிபீடத்தையும், சிலைகளையும் செய்து கொண்டே போனார்கள்.

இப்பொழுது இஸ்ரவேல் மக்கள் விவாகரத்து நிலையை அடைந்திருக்கிறார்கள். தேவனோடு உள்ள உறவில் நாமும் கூட விவாகரத்து நிலையை (உண்மையற்ற நிலை) அடைந்திருக்கின்றோமோ?

தேவனே நம்முடைய இருதயத்தின் தேவனாகவும் இராஜாவாகவும் இருக்கின்றாரா? தேவனை முதன்மையாக அன்பு செய்கின்றோமோ? அவருக்கு விரும்பும் கனியை கொடுக்கின்றோமா? தேவனுக்காக நம் இருதயம் அனலாக இருக்கின்றதா?

நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் நானும் உங்களில் நிலைத்திருப்பேன் என்ற வாக்குறுதியை நினைவு கூறுவோம். எந்த ஒரு கிளையும் தானாக கனிகொடுக்க முடியாது. அது செடியில் இணைந்திருக்க வேண்டும். அதே போல இயேசுவில் நிலைத்திருந்தால்தான் நாம் கனி கொடுக்க முடியும். நானே திராட்சை செடி நீங்கள் அதின் கிளைகள், ஒரு மனிதன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அதிக கனியை கொடுக்க வேண்டும். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

<u>செயல்முறை :</u> உங்களுக்குள் இருக்கின்ற தேவனுக்கேற்ற குணாதிசயங்கள் எவை? இந்த கேள்வியை உங்கள் மூன்று நண்பர்களிடத்தில் கேட்கவும்.

“ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம் .... கலாத்தியர் 5 : 22”





<u>இஸ்ரவேலின் மேல் தேவனுக்கு அன்பு (ஓசி 11 : 1-11)</u>

தொடர்ச்சியான சிட்சையின் செய்திக்கு பின்னால் (ஓசியா 4-10) அவர்களுக்கான தம்முடைய அன்பை தேவன் நினைப்பூட்டுகிறார். வசனம் : 1-4 இஸ்ரவேலின் கடந்த காலத்தைப் பற்றி கூறுகிறது. தன்னுடைய மகனை அழைத்து பயிற்றுவித்த தகப்பனுக்கு தேவன் தம்மை ஒப்பிடுகிறார். மேலும் அவர்கள் தம்முடைய சொந்த புத்திரராயிராமல் சுவிகார புத்திரர் என்பதை தேவன் அவர்களுக்கு நினைப்பூட்டினார்.

அப்படியே நாமும் கிறிஸ்துவுக்குள்ளாக சுவிகார புத்திரர்களாயிருக்கிறோம். கெட்ட குமாரனைப் போல நாமும் தேவனுடைய கிருபையினாலும், மனதுருக்கத்தினாலும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய கிருபையில்லையென்றால் நாம் நிச்சயமாக கெட்டுப் போயிருப்போம்.

தன்னுடைய பிள்ளையை விட்டுக்கொடுக்க முடியாமல் தவிக்கும் உணர்ச்சிகள் நிறைந்த தகப்பனாக தேவனை நாம் காண்கிறோம்.

தேவன் நீதிபரர் ஆயினும் அன்பின் தேவனாயிருக்கிறார். பாவத்திற்கு தண்டனை உண்டு. ஆனால் தேவன் மனதுருக்கம் நிறைந்தவர். சிலுவையில் நாம் தேவனுடைய அன்பையும் நியாயத்தையும் காண்கிறோம்.

<u>இஸ்ரவேலின் பாவம் (ஓசியா 12 : 1-14)</u>

யூதாவுக்கு எதிராக கர்த்தருடைய வழக்கு என்று இந்த அதிகாரம் ஆரம்பிக்கப்படுகிறது. (வசனம் 2) யூதா இஸ்ரவேலைப் போல மோசமான நிலையில் இல்லை. ஆயினும் யூதா மனந்திரும்பாத பட்சத்தில் அதின் முடிவு இஸ்ரவேலைப் போல இருக்கும்.

யூதாவிற்கு இவ்வளவு என்றால், இஸ்ரவேலைப் பற்றி என்ன? எப்பிராயீம் என்றும் அழைக்கப்படுகிறது. இஸ்ரவேல் உண்மையில்லாததும், அகங்காரம், ஐஸ்வரியம் நிறைந்ததும் எல்லாவற்றிலும் “ஒருக்காலும் பாவமாகிய அக்கிரமம் என்னிடத்தில் கண்டுப் பிடிக்கப்படுவதில்லை” என்றும் இஸ்ரவேல் சொல்லக்கூடியதாய் இருந்தது. தேவனுடைய நகரத்திலிருந்து இஸ்ரவேல் தள்ளப்படும்.

- ✦ தேவன் கிருபையாய் அநேக தீர்க்கதரிசிகளைக் கொண்டு பேசியும் தவறு செய்தார்கள். (வ-10)
- ✦ அவர்களை காப்பாற்றினார் (வ – 9)
- ✦ அவர்களுக்காக அக்கரை கொண்டார் (வ.13) ஆனால் அவர்கள் எதிர்த்தார்கள்.

நாம் தேவனுடைய கிருபையை நம் வாழ்க்கையில் அசட்டை செய்கிறோமா? நாம் ஆத்மீக குறைவுக்கான சுருக்கலான பாதையில் இருக்கிறோமா அல்லது ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப் படுகிறோமா?

<u>செயல்முறை</u> : உங்களிடத்தில் குறைகள் இருப்பினும் தேவ அன்பை உங்கள் வாழ்வில் உணர்ந்திருப்பீர்கள், அவற்றை பட்டியலிடுங்கள்.

இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியோ விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள். ரோமர் 3 : 22-24

இஸ்ரவேலை எதிர்த்து தேவகோபம் (ஓசியா 13: 1-16)

தேவன் இஸ்ரவேலைப்பற்றி மடிந்தவன் என்று கூறுகிறார் (வ -1) ஆவிக்குரிய மடிவைப் பற்றி தேவன் பேசுகிறார். விக்கிரகாராதனயால் பற்றி அவ்வாறு கூறினார். தேசத்தின் மடிவு என்றால் அந்த தேசம் எதிரிகளால் அழிக்கப்படும் என்பது தான்.

இந்த அழிவு எங்கிருந்து வருகிறது? ஓசியா இதை உதாரணத்தோடு விளக்குகிறார். முன்பு தேசத்தை காத்தவரே அதின் மேல் நியாயத் தீர்ப்பை கொண்டு வருகிறார். தேவனே இறுதியில் அழிக்கிறார்.

- எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினவர் தேவனே என்பதையும் தேவன் அவர்களை விசாரிக்கிறவர் என்பதைப் பற்றியும் நினைப்பூட்டப்படுகிறார்கள் (வ 5-6)
- இருப்பினும் மக்கள் தேவனை மறந்துப் போனார்கள். இப்பொழுதோ, சகாயம் பண்ணினவரே அவர்களுக்கு கேடுண்டாக்கினார்.
- அடுத்த செய்தி அவர்கள் அழிவைப் பற்றியது. (வ 15-16) தேவனிடத்திலிருந்து அழிவு வரும்.

மனந்திரும்புதல் ஆசீர்வாதத்தை கொண்டுவரும் (ஓசியா 14 : 1-9)

தம்மிடத்தில் திரும்பும்படி தேவனுடைய கோரிக்கையோடு ஓசியா புத்தகம் முடிவடைகிறது. தேவனுடைய கடைசி வார்த்தையாகி முடிவடைகிறது. பாவ அறிக்கையிட்டு உண்மையாக மனந்திருந்திரும்படி தேவன் கோரிக்கையிடுகிறார்.

மனந்திரும்புதல் என்பது தேவ கிருபையை சார்ந்ததாகவும் இருக்கிறது (வ2) நீங்கள் பாவங்களிலிருந்து உண்மையாகவே மனந்திரும்பும்படி அவர் அழைப்பு விடுத்தார்.

தேவன் புதுப்பிக்கும் வாக்குத்தத்தங்களை கொடுக்கிறார். தேவன் மூன்று காரியங்கள வாக்களிக்கிறார்.

- அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவார் (வ-4)
- அவர்களை சிநேகிப்பார் (வ-4)
- மறுபடியும் தம் மக்களை செழிக்கச் செய்வார். (வ 5-7)

தேவனுடைய விசாலமான வாக்குத்தத்தம் நம்மை ஆச்சரியப்படுத்துகிறதா? அவருக்குள் நமக்கு அழகு இருக்கிறது. பெலன், மதிப்பு, களிப்பு மற்றும் நிறைவு இருக்கிறது.

தேவ வார்த்தைகளை உணரத்தக்க ஞானமுள்ளவர் யார் என்றும், இவைகளை கிரகிக்கத்தக்கவன் யார் என்றும் ஓசியா நிறைவு செய்கிறார். பாவம் மரணத்தைக் கொண்டு வருகிறது. ஆனால் கீழ்படிதலோ ஜீவ வழி, இது இன்றும் உண்மை. கர்த்தருடைய வழிகள் எனறும் செய்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள், பாவிகளோவென்றால் அவைகளில் இடறி விழுவார்கள்.

செயல்முறை : நீங்கள் கிறிஸ்தவரானது முதல் தேவனிடத்திலிருந்து பெற்ற சில ஆசீர்வாதத்தை பட்டியலிடுங்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலக தோற்றத்துக்கு



முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்ட படியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார். - எபேசியர் 1 : 3-6



அறிமுகவுரை :

யூதா தேசத்து தென் பகுதிகளுக்கு யோவேல் தீர்க்கதரிசியாக இருந்தார். தேவனிடத்திலிருந்து வந்த அழிவுக்குரிய சிட்சைகளை குறித்து தீர்க்க தரிசனம் உரைத்தார். மேலும் மேசியாவைப்பற்றி விரிவான தீர்க்க தரிசனம் உரைத்தார். யோவேலின் கால கட்டத்தை குறிப்பது மிகவும் கடினம். கி.மு.830 என்று நாம் யூகிக்கலாம்.

- கர்த்தரே தெய்வம் என்பது இந்த தீர்க்கதரிசியினுடைய பெயரின் அர்த்தம்.
- மக்கள் மனத்திரும்பா விட்டால் வெட்டுக்கிளிகளால் சிட்சிக்கப்படுவார்கள் என்றும், அப்படியும் மனந்திரும்பாமல் போனால் இன்னும் அதிகப்படியான சிட்சை வரும் என்பது பற்றியும் உரைத்தார்.
- இவருடைய மனந்திரும்புதலுக்கான அழைப்பு இருதயத்தை கிழிப்பதே அன்றி வெளிவேஷமல்ல என்பதை வலியுறுத்தினார்.
- ஆவியினால் நிரப்பப்படும் வாக்குத்தம் பற்றிய இவருடைய வசனங்கள் பிரசித்திமானவை (யோவேல் 2 : 28-30)

புலம்புவதற்கான அழைப்பு : (யோவேல் 1 : 1- 2 : 1)

- வெட்டுக்கிளியினால் வரும் தீங்கைக் குறித்து யோவேல் மக்களுக்கு எச்சரித்தார்.
- மூப்பர்கள் தலைவர்களான படியால், மனந்திரும்பும்படி அவர்களுக்கு முதல் அழைப்பு விடுத்தார்.
- அவர் வெறியர்களான குடிகாரர்களையும் (வசனம் 5) மற்றும் விவசாயிகளையும் (வசனம் 11) எச்சரிக்கிறார்.
- கடைசியாக ஆசாரியர்களை எச்சரித்தார். (வசனம் 13-20)

மனத்திரும்புதல் என்பது உபவாசத்தோடும், அழுகையோடும் புலம்பலோடும் அவர்கள் முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் திரும்புவதாகும் என்பதையும், அவர்கள் தங்கள் வஸ்த்திரங்களையல்ல, அவர்கள் இருதயங்களை கிழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். (2:12-13) மக்கள் எப்போதுமே இருதயங்களை பாராமல் வெளி வேட பக்தியை எடைபோட்டு மற்றவர்களை நம்பிவிடுவதற்கு சோதிக்கப்படுகிறார்கள். நம் இருதயங்கள் தேவனிடம் திருப்பப்பட்டிருக்கிறதா? நம் வஸ்த்திரங்களை மட்டும் நாம் கிழிக்கிறோமோ அல்லது நம் இருதயங்கள் உண்மையாகவே நொருங்கியிருக்கிறதா? எது மிகவும் முக்கியம் செயலா அல்லது மனப்பான்மையா ? நாம் எதன் மேல் நாம் கவனத்தை திருப்புகிறோம்?

சிட்சையை ஆசீர்வாதங்கள் பின்தொடரும் (யோவேல் : 2 : 12 - 3 : 21)

- வாதையிலிருந்து உடனடி நிவாரணம் (2 : 13 - 27)
- ஆவியினால் நிரப்பப்படுவது (2 : 28 - 32) (மனந்திரும்பி பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குள் வாசம் செய்யும்படி பாக்கியம் பெறுகிறார்கள். (அம் 2 : 38 - 39)
- யூதா மற்றும் எருசலேமின் புதுப்பிக்கப்பட்ட எதிர்காலம் (3 : 1-16 (அ))
- இறுதியான ஆசீர்வாதமாகிய மேசியாவின் வருகை (3 : 17 - 21)

தேவ சிட்சையை எப்போதுமே ஆசீர்வாதம் பின்தொடரும் அல்லது தேவன் பெருமை உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் என்றும் சொல்லலாம். நாம் அனைவரும் புதுப்பிக்கப்படுவதை வாஞ்சிப்போம் ஆனால் புதுப்பித்தல் மனந்திரும்புவதால் மட்டுமே வரும். நாம் தேவனிடத்திற்கு திரும்பும்போது, அவர் நம்மை அபரிமிதமாக ஆசீர்வதிக்கிறார்.

செயல்முறை : சங்கீதம் 51யை வாசித்து ஜெபிக்கவும்,
சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் – ஏசா 66 2

## ஆமோசின் புத்தகம் (ஆமோஸ் 1–2) நாள் 9

<u>அறிமுகவுரை :</u>

- ஆமோஸ் என்றால் "சுமைதாங்கி" என்று அர்த்தம் தெக்கோவா நகரத்தின் தெற்கு ராஜ்யத்தை சேர்ந்தவர்.
- தீர்க்கதரிசியாவதற்கு முன் அவர் மந்தை மேய்க்கிறவரும் காட்டத்தி பழங்களைப் பொறுக்கிறவருமாயிருந்தார் (7 : 14)
- எரோபெயாமின் நாட்களில் அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார்.
- பொருளாசைப்பற்றி தேவன் இந்த புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.
- வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு வருவதற்கு முன்பே தேவன் பொருளாசையைப் பற்றி விவரிக்கக் கூடியவராயிருந்தார். (உபாகமம் 6 : 10-12, 8:6-14) வசதிகள் அதிகரிக்கும்போது, ஆத்மீகமாக நோக்கமுடையவர்களாயிருப்பது கடினம்.

<u>இஸ்ரவேலை சுற்றியிருந்தவர்கள் மேல் வந்த நியாயத்தீர்ப்பு (ஆமோஸ் 1:1-2 : 5)</u>

- தமஸ்கு – அவர்களின் பாவம் கிலேயாத்திற்கு எதிராக கொடியதாயிருந்தது (காத் மறறும் ரூபனின் கோத்திரங்கள்) தேவனின் நியாயத்தீர்ப்பு அழிவும், சிறையிருப்புமாயிருந்தது.
- காசா (பிலிஸ்தியர்) அவர்களின் பாவம் அடிமைகளை வாங்கல், விற்றல், மற்றும் பேரழிவு அவர்களின் நியாயத்தீர்ப்பு
- தீரு. அவர்களின் பாவமும் அடிமைகளை வாங்கல்
- ஏதோம் – அவர்கள் உறவுகளை வெறுத்தலே அவர்களின் பாவம்.
- அம்மோன் – கர்ப்பஸ்திரீகளைக் கீறிப்போட்டது. அவர்களின் பாவமாயிருந்தது?
- மோவாப் – ஏதோமுடைய ராஜாவை சாம்பலாக சுட்டுப்போட்டது

சுவாரசியமான விஷயம் என்னவென்றால், கர்த்தருடைய கண்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கும் எதுவும் தப்பாது. எல்லா பொல்லாப்புகளுக்கும் முடிவு உண்டு என்பதை நினைக்கும்போது நிவாரணமளிக்கின்றது.

<u>யூதாவின் மேலும் இஸ்ரவேலின் மேலும் வந்த நியாயத்தீர்ப்பு (ஆமோஸ் 2 : 6-16)</u>

- யூதா அந்நிய தேவர்களை வழிபடுவதால் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை நிராகரித்தார்கள்.
- இஸ்ரவேல் – பல பாவங்கள் பட்டியலிடப்பட்டிருக்கின்றது (அ) சமூக கொடுமை (ஆ) விபச்சாரம் (வேசித்தனம்) (இ) விக்கிரகாராதனை அந்நிய தேவர்களை வழிபடுதல் (ஈ) தேவனுக்கு எதிர்த்து நிற்பது.
- அவர்களுடைய அழிவிற்கு அவர்கள் தப்ப இயலவில்லை.
- கி.மு. 722ல் இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது. இஸ்ரவேலின் வடராஜ்யம் சிறைபட்டு; போனபோது இது நிறைவேறியது. (11 ராஜாக்கள் 17 :



தேவன் தாம் உடன்படிக்கை பண்ணின மக்களைப் பற்றி மட்டும் அக்கரையுள்ளராயிராமல் அவர்களை சுற்றியிருந்த தேசங்களைப் பற்றியும் அக்கரைக் கொண்டிருந்தவர். தேவனே நீரே நீதியுள்ள நியாயதிபதி, மனிதர்களின் செயல்களுக்கு தேவன் கணக்கு கேட்கிறவர். சரியானதை செய்வதற்கும் நம்மை தேவ வார்த்தை மாற்றுவதற்கும் நாம் அனுமதிக்கிறோமா?

<u>செயல்முறை</u> : உங்களின் தற்போதைய வாழ்க்கையைக் குறித்து தேவனின் மிகப்பெரிய அக்கரையாக எது இருக்கலாம்?

தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள் எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. பிரசங்கி 12:13

## ஆமோசின் புத்தகம் (ஆமோஸ் 3 –4) நாள் 10

<u>இஸ்ரவேலின் முடிவு (ஆமோஸ் 3 : 1-15)</u>

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களில் நம் கவனத்தை திருப்புவோம். தேவன் இஸ்ரலேுக்கு எதிராக உரைத்தது (3 : 1-2)

- எவர்களோடு விசேஷ நெருக்கம் கொண்டிருந்தாரோ
- அவர்களின் பாவத்திற்கு இப்போது தண்டிக்கிறார்.
- அவருடைய தீர்க்கதரிசிகள் மூலமாக மட்டுமே தேவன் தம்மை வெளிப்படுத்துகிறவர் (3:7-8)
- சிங்கம் கெர்ச்சிப்பது போல, தேவன் உரைத்தார். ஆமோஸ் அதை தீர்க்கதரிசனமாக உரைத்தார்.
- அஸ்தோத் மற்றும் எகிப்து தேசங்கள் இஸ்ரவேலின் ஒழுங்கின்மைக்கு சாட்சிகளாய் இருந்தார்கள். (3 : 9-10)
- எதிரிகளால் இஸ்ரவேலுக்கு அழிவு ஏற்ப்பட்டது. (3 : 9-10)

தேவனுடைய வார்த்தைகளை கேட்பதற்கு நாம் தீவிரமாயிருக்கிறோமா? தேவன் தம் வார்த்தையின் மூலம் மனிதர்களுக்கு அவரின் திட்டத்தைக் குறித்து வெளிப்படுத்துகிறார். ஆனால் அவருடைய திட்டத்தையும், வாக்குத்தத்தங்களையும் நாம் நம்புகிறோமா? தேவ கோபாக்கினையை எதிர்த்து யாரால் தாக்கு பிடிக்க முடியும்? கிறிஸ்துவோடு இணைந்து நிற்பவர்கள் மட்டுமே அவரின் மூலமாகத்தான் ஒருவரும் தவிர்க்க முடியாத தேவனின் நியாயத் தீர்ப்பிலிருந்து பாதுகாக்கப்படுவோம்.

<u>இஸ்ரவேல் பெண்களின் சீர்கேடு (ஆமோஸ் 4 : 1-3)</u>

இஸ்ரவேலின் பெண்கள் பாசானின் மாடுகள் என்று அழைக்கப்பட்டார்கள்.

- அவர்கள் தரித்திரரையும், எளியவர்களையும் ஒடுக்கினார்கள். (4 :1)
- மதுபானத்திற்காக ஏங்குகிறவர்கள் (4:2)

பெத்தேல் மற்றும் கில்காவின் பொய்த்தேவர்களை வழிப்படும்படி தேவன் அவர்களுக்கு விரக்தியோடு கூறினார். தேவனைவிட்டு எவ்வளவு தூரம் விலகியிருக்கிறார்கள் என்பதை தெரியப்படுத்த வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மனந்திரும்புவதற்கு தேவனின் முயற்சிகளுக்கு பதிலளிக்கத் தவறிவிட்டார்கள்.

- பஞ்சம் (4 :6)
- வறட்சி (4:7-8)
- வியாதி (4:9)
- வாதை மற்றும் போர் (4:10)
- பூமியதிர்ச்சிகள் (4:11)

அவர்கள் கவனத்தை பெறுவதற்காக தேவன் இயற்கை சீற்றங்களை பயன்படுத்தினார். தேவனின் முயற்சிகளுக்கு அவர்கள் ஏன் செவிகொடுக்கவில்லை? ஒரு வேளை, தற்செயலாக நடந்தது என்று அவர்கள் யோசித்திருக்கலாம். ஒவ்வொரு அழிவின் மூலமாக தேவன் ஏதோ ஒன்றை கற்றுக்கொடுக்கிறார் என்பதை நாம் நம்புகிறோமா?

அநேக எச்சரிக்கைகளுக்கு செவிகொடுக்க தவறிய பின்பு, அவர்கள் இப்போது அவர்கள் மீது நியாயத்தீர்ப்பு கொண்டுவரப்போகிற தேவனை சந்திப்பதற்கு தயாராக வேண்டும்.

செயல்முறை : நீங்கள் மேற்குறிப்பிட்டுள்ள இயற்கை சீற்றத்தில் அகப்பட நேரிட்டால், எப்படி உணர்வீர்கள்?

ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரான படியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் -I பேது 5 : 6-7)

## ஆமோசின் புத்தகம் (ஆமோஸ் 5-6) நாள் 11

இஸ்ரவேலுக்கான புலம்பல் (ஆமோஸ் 5:1-17)

இஸ்ரவேலில் வரப்போகும் அழிவிற்காக புலம்புவதற்கு அழைக்கப்பட்டார்கள். (வ. 1-2) மற்றும் வெகுசிலரே தப்பித்தார்கள் மீந்தார்கள் (வ-3) ஆனால் இன்னும் நம்பிக்கை இருப்பதால் மனந்திரும்புவதற்கு தேவன் அழைப்புவிடுத்தார்.

- தேவனைத் தேடினால் வாழ்வடையலாம் (வ.4-7)
- சர்வவல்லவரைத் தேடுங்கள் (வ.8-9)
- உங்களின் பாவங்களை அறிந்திருக்கிறார். (வ.10-13)
- நன்மையை தேடுங்கள், ஒருவேளை தேவன் கிருபை அளிக்கலாம். (வ. 11-15)

இன்று நாம் தேவனைத் தேடுகிறோமா? நாம் தேவனைத் தேடுகிறோமென்று நம் வாழ்க்கை காட்டுகிறதா? தேவனைத் தேடுவதன் மூலம் நாம் வாழ்வடைகிறோம். தேவனைத் தேடுவதென்றால் நன்மையைத் தேடுவது தீமையை அல்ல.

கர்த்தரின் நாள் (ஆமோஸ் 5 : 18 - 6 : 14)

கர்த்தருடைய நாள் வருகிறது வீதிகளிலும், வயல்களிலும் புலம்பல் காணப்படும்

- பாவிகள் கர்த்தருடைய நாளை விரும்பமாட்டார்கள். அது அந்தகார நாளாயிருக்கும் (வ 18-20)
- கர்த்தர் அவர்களுடைய பக்தியை பகைத்து வெறுத்தார். நீதியும் நியாயமில்லாத பக்தி (வ 21-24)
- தேவனை ஒரு போதும் உண்மையாக சேவிக்கவில்லை வனாந்தரத்திலும் கூட (வ.25-26)
- ஆகையால் "தமஸ்குவிற்கு" மேலாகவும் எடுத்துச் செல்லப்பட்டார்கள் (வ 25-27)
- நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கும், சமரியாவை நம்பிக் கொண்டிருக்கிறவர்களுக்கும் ஐயோ ! (6 : 1-2)
- தங்கள் சகோதரர்கள் உபத்திரவத்திலிருக்கும் போது, தீங்கு நாள் தூரமென்றெண்ணி தங்கள் மஞ்சங்களிலும் சவுக்கியமாய் இருப்பவர்களுக்கும் ஐயோ



- தேவன் அவர்களுடைய மேன்மையை வெறுக்கிறபடியால், அவர்களின் அழிவு வருகின்றது.
- அவர்களுடைய மக்களும், வீடுகளும் அழிக்கப்படுவார்கள் (6:8)
- அவர்களுடைய மக்களும், வீடுகளும் அழிக்கப்படுவார்கள் (6:9-11)
- தங்கள் பெலத்தினாலே மேன்மை பாராட்டியதால் நீதியையும், நியாயத்தையும் சீர்குலைத்தார்கள் (6: 12-13)

நம் வாழ்க்கையிலும் கர்த்தருடைய நாள் வருகின்றது. அது நியாயத்தீர்ப்பு நாள். அந்த நாளில்தான் நம் வாழ்க்கையை குறித்து கணக்கு கொடுக்க வேண்டும். நாம் அந்த நாளை எப்படி சந்திப்போம்? நம்முடைய வழக்கு என்னவாகயிருக்கும்? மனந்திரும்புதலுக்கான அழைப்பு நமக்கும் தான். தேவனை விசுவாசத்தோடும் கீழ்படிதலோடும் தேடுங்கள். தேவனைத் தேடி ஜீவியுங்கள்.

செயல்முறை : நம் ஜெப வாழ்க்கையில் வரும் வாரத்திலிருந்து மாறுவதற்கு முடிவெடுங்கள். (முழங்கால் படியிட்டு, அதிகாலையில். விசேஷ இடத்திற்கு போய் ஜெபிப்பது)

"இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். லூக் 13 : 24"

## ஆமோஸின் புத்தகம் (ஆமோஸ் 7-9) நாள் 12

வெட்டுக்கிளியைப் பற்றிய தரிசனம் (ஆமோஸ் 7:9)

வெட்டுக்கிளியைப் பற்றிய ஐந்து தொடர் தரிசனங்களை ஆமோஸ் காண்கிறார். வெட்டுக்கிளியைப் பற்றிய தரிசனம் வெட்டுக்கிளி படையெடுத்து பயிர்களை பேரழிவுக்குள்ளாக்குவதை கர்த்தர் ஆமோசுக்கு காண்பிக்கிறார். இஸ்ரவேலுக்காக (யாக்கோபு) ஆமோஸ் கதறுகிறார். வெட்டுக்கிளி வாதை அவர்களை தாக்காதபடிக்கு தேவன் அதற்கு செவி கொடுக்கிறார். அவர் மனஸ்தாபப்பட்டு, அப்படி ஆவதில்லை என்றார்.

அக்கினி தரிசனம் (ஆமோஸ் 7 : 4-6)

அக்கினி மகா ஆழியைப்பட்சித்து, அதில் ஒரு பங்கை பட்சித்து தீர்ப்பதை தேவன் ஆமோசுக்கு காண்பிக்கிறார். இன்னும் ஒரு விசை ஆமோஸ் யாக்கோபிற்காக கதறினார். கர்த்தர் மறுபடியும் அதற்கு மனஸ்தாபப்பட்டு, அப்படி ஆவதில்லை என்றார்.

தூக்கு நூல் தரிசனம் ; (ஆமோஸ் 7 : 7-9)

கர்த்தர் தூக்கு நூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட ஒரு மதிலின் மேல் நின்றார். அவர் கையில் தூக்கு நூல் இருந்தது. அப்பொழுது ஆண்டவர், இதோ இஸ்ரவேலென்னும் என் ஜனத்தின் நடுவே விடுவேன். விக்கிரக ஆராதனை நிறைந்த இடங்களையும், எரொபெயாம் வீட்டாரையும் மன்னிக்கமாட்டேன் என்றார். அப்பொழுது பெத்தேலில் அமத்சியா இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏரோபெயாமுக்கு விரோதமாக உரைத்த வார்த்தைகளை சகிக்க மாட்டேன் என்று எதிர்த்தான். ( 7 : 12-13) ஆனால் ஆமோஸ் தன்னுடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்காக பரிந்து பேசினார். ( 7 : 14-15) அமத்சியா மற்றும் இஸ்ரவேலை எதிர்த்து ஆமோசின் தீர்க்கதரிசனங்கள் (7 : 16-17)

கோடைக்கால பழக்காலம் பற்றிய தரிசனம் (ஆமோஸ் 8 : 1-14)

ஆமோஸிடம் ஒரு கூடையில் கோடைக்கால பழம் காண்பிக்கப்பட்டது. (பழுத்தவைகளாய் இருந்தன) இஸ்ரவேலானது முடிவுகாலத்திற்கு அருகிலும் பருத்தவைகளாக நியாயத்தீர்ப்புக்கும் வந்துவிட்டது என்று தேவன் வெளிப்படுத்தினார்.

பலிபீடத்தின் மேல் தேவனுடைய தரிசனம் (ஆமோஸ் 9:1-15)

பலிபீடம் தகர்க்கப்படும். ஒருவரும் தப்பிக்கொள்ளுவதில்லை. (1:14) ராஜ்யம் முற்றிலும் அழிக்கப்படும். மீதியானவர்களின் இரட்சிப்பு முன்னறிவிக்கப்பட்டது (9:11-12) தேவனுடைய கடைசி வார்த்தையோடு நியாயத்தீர்ப்பு முடிவடையவில்லை. நியாயத்தீர்ப்பிற்கு பின்னால் (மீதியானவர்களுக்கு) நம்பிக்கை இருந்தது. கீழ்ப்படிதல் எப்போதுமே ஆசீர்வாதங்களையும் கீழ்ப்படியாமை எப்போதுமே நியாயத்தீர்ப்பையும் கொண்டுவரும் என்பதை தேவன் இஸ்ரவேலுக்கு போதித்தார். இது இஸ்ரவேலுக்கும் பொருந்தும். மேலும் நம் ஒவ்வொருவருக்கும் மற்றும் சபைக்கும் பொருந்தும். கிறிஸ்தவர்கள் தங்களை தாழ்த்தி, ஜெபித்து தேவனைத்தேடி தங்கள் பொல்லாத வழிகளை விடுவார்களோ? அப்படியென்றால் தேவன் அவர்களை ஆசிர்வதிப்பார். அப்படியில்லையென்றால், அவர்கள் நியாயந்தீர்க்க படுவார்கள். பரிசுத்த தேவன் தம்மை பின்பற்றுவர்களிடத்தில் பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார்.

இறுதியாக, கிருபைப்பற்றி பார்ப்போம். தேவன் தம் மக்களுக்கு கிருபையளிக்கிறார். அவர் இஸ்ரவேலிடம் கிருபை கூர்ந்தார். சபைக்கும் கிருபை அளிக்கிறார். கேள்வி என்னவென்றால், நாம் தேவ கிருபைக்கு பதிலளிப்போமா அல்லது அதை விட்டு விலகுவோமா?

செயல்முறை : ஒரு சீஷராகி, தேவனுடைய ராஜ்யத்தில் உங்கள் தரிசனம் என்னவாக இருக்கிறது?

தம்மை பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது. – 2 ஆம் நாளாகமம் 16 : 9

## ஒபதியாவின் புத்தகம் (ஒபதியா 1) நாள் 13

அறிமுகவுரை :

- ஒபதியா என்றால் தேவனுடைய ஊழியக்காரன் என்று அர்த்தம்.
- 21 வசனங்கள் அடங்கிய தீர்க்கதரிசியைப் பற்றிய புத்தகமேயல்லாமல், இந்த தீர்க்கத்தரிசியைப் பற்றி வேறொன்றும் அறியப்படவில்லை. (எபிரேய வேதாகமத்தில் மிகச்சிறிய ஏதோமியர்களைப் பற்றிய தேவவார்த்தையைக் கொண்ட புத்தகமிது)
- ஏசா தன் சேஷ்ட (மூத்த) புத்திர பாகத்தை யாக்கோபுக்கு விற்றுப் போட்டதிலிருந்து ஏதோமியர்களுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் வெறுப்பும், பொறாமையும் ஆரம்பித்தது. (அதி 25-27)
- இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வெளியேறின போது, (யாத்திராகமம்) இந்த இரு தேசங்களுகும் சண்டை ஆரம்பித்தது. (எண்ணாகமம் 20). ஏதோம் முற்றிலுமாக சங்கரிக்கப்படும் (எண்ணாகமம் 10) என்ற ஒபதியாவின் தீர்க்கதரிசனத்தின் படி கி.பி.100 க்குள்ளாக அது முற்றிலுமாக மறைந்து போயிற்று.

அழிவுக்கு முன்னானது அகந்தை (ஒபதியா 1-14)

- அவர்கள் அழிந்து போகவே மாட்டார்கள் என்று நினைக்கும்படியாக அவர்களுடைய அகந்தை (பெருமை) அவர்களை வஞ்சித்தது.
- அவர்களுடைய இருப்பிடத்தைக் குறித்து அகந்தை கொண்டார்கள் (வசனம் 3-4) கன்மலை வெடிப்புகளிலும் உயர்ந்த ஸ்தானத்திலும் அவர்களின் குடியிப்பு.
- அவர்களுடைய ஞானிகளைக் குறித்து அகந்தை கொண்டார்கள் (வசனம் 8)
- அவர்களுடைய பராக்கிரமசாலிகளைக் குறித்து அகந்தை கொண்டார்கள் (வசனம் 9)



அகந்தை (பெருமை) எப்போதுமே தன்னுள் அழிவை வைத்திருக்கிறது. அது நம் பைக்குள் சாத்தான் போடும் வெடிகுண்டைப்போல இருக்கிறது. ஆனால் எவ்வளவு காலம் சென்று வெடிக்கும் என்பதுதான் பயமளிக்கும் விஷயம். அது சீக்கிரமாகவும் இருக்கலாம் அல்லது மிகவும் தாமதமாகவும் இருக்கலாம் நியாயத் தீர்ப்பிற்கு முன்பாக வெடிக்கவில்லை யென்றால் அந்த நாளில் அது வெடிக்கும்.

எந்த வகையில் நாம் அகந்தையுள்ளவர்களாக இருக்கிறோம்? நாம் மற்றவர்களை தரக்குறைவாக பார்க்கிறோமா ? அல்லது மற்றவர்கள் கஷ்டப்படும் போது நாம் சந்தோஷப்படுகிறோமா?

நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் (ஒபதியா 15-21)

இது உலகளாவிய உண்மையாயிருக்கிறது. எல்லாக் காலக்கட்டத்திலும் இது உண்மை நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். ஏதோமியர்கள் விதைத்ததை அவர்கள் அறுத்தார்கள்.

நாம் நேற்று எதை விதைத்து இன்று அதை அறுத்துக் கொண்டிருக்கிறோம் ? நாளைய தினத்தில் எப்படி மாறலாம் ? நீதியை இன்று விதைப்பதன் மூலம்தான் ! உலகம் இப்பொழுது வாங்கிக் கொண்டு பின்பு பணம் செலுத்தலாம் என்று நம்மை சோதிக்கிறது. ஆனால் இன்று செலுத்துவதன் மூலம் நாளை அறுக்கலாம் என்பதுதான் தேவனின் வழி.

செயல்முறை : எந்த வழிகளில் நீங்கள் பெருமையாக இருக்கிறீர்கள் ?

அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிராறென்று சொல்லியிருக்கிறது. ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் ; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். – யாக் 4 : 6-8.

## யோனா புத்கம் (யோனா 1- 2) நாள் 14

அறிமுகவுரை :

- யோனா என்பதற்கு ''புறா'' என்று பொருள். அவர் இஸ்ரவேலின் வட இராஜ்யத்தின் தீர்க்கதரிசியாக இருந்த போதிலும். அவரது நேர்த்தியான நோக்கமானது அசீரியாவின் தலைநகரமான நினிவேவிற்கு விரோதமாக பிரசங்கிப்பதே.

- அவருடைய செய்தி மிகவும் எளிதானதாக இருந்தது. இன்னும் நாற்பது நாள் உண்டு அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுபோம். (3-4)
- இயேசு இந்த இளைய தீர்க்கதரிசியை மத்தேயு 12:38-41 மற்றும் மத்தே 16:4 போன்ற இடங்களில் குறிப்பிடுகிறார்.
- இந்தப் புத்தகம் அற்புத நிகழ்ச்சியிலும் தனித்தன்மை பெற்றது. அதில் குறிப்பிடத்தக்கது பெரிய மீன் யோனாவை விழுங்கின நிகழ்ச்சி இதில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சியானது திறமை வாய்ந்தவர்களும் இந்தப் புத்தகத்தை பற்றி மேலும் கண்டறிய உதவியாயிருந்தது. மேலும் இந்த நிகழ்ச்சி ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நடந்த போதிலும் இயேசு இதை நம்பகமான வரலாற்று மிக்கதாக மாற்றினர்.

தேவனிடமிருந்து விலகி ஓடுவது (யோனா 1 : 1 – 17)

- தேவன் யோனாவிற்கு அவருடைய வார்த்தையை பிரசங்கிக் கட்டளையிட்டார் (வ 1-2)
- யோனா தேவனுக்கு கீழ்படியாமல் வேறு திசை நோக்கி ஓட முடிவெடுத்தான். (வ 3-4)
- தேவனை விட்டு விலகின ஓட்டம் அவ்வளவான சந்தோஷத்தை தரவில்லை. அவன் ஒரு சூறாவளியை சந்திக்க வேண்டியதாயிருந்தது.
- இந்த நிகழ்ச்சி தீர்க்கதரிசியின் தைரியத்தை விளக்கினாலும் யூதரல்லாதவர்கள் மேல் தவறான அபிப்பிராயம் வர காரணமாயிருந்தது.

நீங்கள் எந்த விதத்தில் தேவனை விட்டு விலகி ஓடுகிறீர்கள்? தற்போது உங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு சூறாவளியை சந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா ? அது நீங்கள் தேவனை விட்டு விலகி ஓடுவதால் சந்தித்தீர்களா ? கீழ்படியாமற்போவது என்பது மிகவும் விலையுயர்ந்தது, அதற்கேற்ற கிரயத்தை நாம் தேவனிடத்தில் செலுத்த வேண்டும். தேவனை விட்டு விலகி ஓடுவதைப்பார்க்கிலும் தேவனை நோக்கி ஓடுவது மிகவும் சுலபமான காரியம்.

தேவனை நோக்கி ஓடுவது (யோனா 2 : 1 –10)

- இந்த தீர்க்கதரிசி தன்னுடைய கீழ்படியாமையை குறித்து உணரத் தொடங்குகிறார்.
- இந்த பெரிய மீன் (திமிங்கலமாக இருக்கலாம்) விழுங்கினது ஓர் அற்புதம்.
- யோனா மீனின் வயிற்றிலிருந்து படியே ஜெபம் செய்தான். நாமும் எந்த இடத்திலிருந்தாலும் தேவனை நோக்கி ஜெபம் செய்யலாம். யோனா தன்னுடைய ஜெபத்தில் அவனுக்கு நடந்த நிகழ்ச்சியைக் குறித்து கப்பலோட்டியை குற்றஞ்சாட்டாமல், இவை எல்லாம் தேவனுடைய திட்டத்தின்படியே நடந்தது என்று உணர்ந்தான். (வ – 3)
- தன்னை தாழ்மைப்படுத்தி மனம் மாறினான்.

நம்முடைய கீழ்ப்படியாமையை நாம் உணருகிறோமா ? நம்முடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களுக்கு மற்றவர்களை குற்றம் கூறுகிறோமா ? எல்லாமே தேவனுடைய திட்டமே என்று புரிந்து கொள்கிறோமா ? நம்முடைய ஜெபத்தில் நேர்மையாக இருக்கிறோமா ?

செயல்முறை : உங்களுடைய வாழ்க்கையில் எந்த சில சீஷர்களை சந்திக்க வேண்டாம் என்று நினைக்கிறீர்கள் ?

“சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவரும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் – எபி 3 : 12, 13”

---

## யோனா புத்தகம் (யோனா 3 – 4) நாள் 15

---

தேவனுக்காக ஓடுவது (யோனா 3 : 1 – 10)

- யோனா தேவன் எந்த செய்தியை பிரசங்கிக்கச் சொன்னாரோ அதையே பிரசங்கித்தார்.
- அவனுடைய மனப்பான்மை அவ்வளவாக மாறாமல் இருந்த போதிலும் அவனுடைய செயல் தேவனோடு கூட இருந்தது.



- நினிவே மக்கள் பெரும் மாற்றத்துடன் மனந்திரும்பினார்கள். மக்களுடைய மனந்திரும்புதலானது ராஜாவினிடத்தில் இருந்து தொடங்கினது கவனத்திற்குரியதாயிருக்கிறது. நினிவே மக்கள் அவர்களுடைய கொடுங்குணத்திற்கும், ஒழுங்கின்மைக்கும் பிரசித்தமானவர்கள் ஆனாலும் மனந்திரும்புதலானது நிகழக்கூடிய ஒன்றாக இருந்தது.

தேவன் அவர்கள் மேல் தீங்கு நேரிடாதபடிக்கு தயவாயிருந்தார். தேவன் நினிவேவை 100 ஆண்டுகளுக்கும் மேலாக அழிக்காதபடி விலகியிருந்தார். இறுதியாக கிட்டத்தட்ட கி.மு. 612ல் நினிவே அழிக்கப்பட்டது.

எந்த நேரமும் மனந்திரும்புதலுக்கு தாமதமான நேரம் கிடையாது. நாம் மனந்திரும்பும் போது அழிவு நேரிடாதபடிக்கு தேவன் நம்மிடம் தயவாயிருப்பார்.

தேவனைக்காட்டிலும் முன்னாக ஓடுவது (யோனா 4 : 1–11)

- இதில் நாம் யோனாவினுடைய உண்மையான குணாதிசயத்தை பார்க்க முடிகிறது. மனிதன் தேவனைவிட எவ்வளவு மாறுபாடுள்ளவன் என்பதை பார்க்கிறோம்.
- யோனா கோபமடைந்தான். தேவன் பொறுமையாக இருந்தார்.
- யோனா ஆமணக்குச் செடியைக் குறித்து மகிழ்ச்சியாயிருந்தான். தேவன் பாவிகளுடைய மனந்திரும்புதலைக் குறித்து மகிழ்ச்சியடைந்தார்.
- யோனா ஆமணக்குச் செடிக்காக கவலை கொண்டான். தேவன் இந்த தொலைந்த நகரத்தைக் குறித்து கவலைப் பட்டார்.

நம்மை தனிப்பட்ட முறையில் பாதிக்கக்கூடிய அன்றாட நிகழ்வுகளைக் குறித்த உணர்ச்சிப்பூர்வமான கவலை சுலபமாக இருக்கலாம் ஆனால், உணர்ச்சிப்பூர்வமாக இருந்தும், நம்முடைய பெரிய ஆத்மீக தேவைகளைக் குறித்த கவலை நம்மை பாதிக்காமல் இருக்கிறது. எதைக்குறித்து இன்று நாம் கவலைப்படுகிறோம். தேவன் அதைக்குறித்து கவலைப்படுவாரா? அடிப்படையில் தேவன் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்புகிறார். (2 பேதுரு 3 : 9)

இந்த புத்தகம் ஒரு கேள்வியோடு நிறைவடைகிறது. எழுத்துவடிவிலான பதில் இல்லாத ஒரு கேள்வி. இது பிழை இல்லை. இந்தப் புத்தகத்தில் நிறைய செய்திகள் உள்ளது. ஆனால் இந்தப் புத்தகத்தின் சிறப்பான செய்தி என்னவென்றால் தேவனுடைய மேன்மையான இரக்கம் தேவனுடைய இரக்கம் எவ்வளவு மேன்மையானது? தேவனுடைய மேன்மையான உண்மையான இரக்கத்தில் அளவானது. இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிப்பதற்காக தன்னுடைய கரங்களை விரித்து சிலுவையில் மரித்ததின் மூலம் விளங்கும். இதுவே தேவனுடைய விசாலமான இரக்கம் இந்த அளவிற்கு தேவனுடைய அன்பு மேற்கொண்டு செல்லும்

செயல்முறை : உங்களுடைய விசுவாசத்தை ஐந்து நபர்களிடம் பகிர்ந்துக்கொள்ளுங்கள்

கலக வீட்டாராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி தங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசி உண்டென்கிறதை அவர்கள் அறிய வேண்டும். மனுபுத்திரனே, நீ அவர்களுக்கு பயப்பட வேண்டாம். அவர்கள் வார்த்தைகளுக்கு அஞ்ச வேண்டாம். (எசேக்கியல் 2 : 5,6)

அறிமுகவுரை :

- மீகா என்பதற்கு "யாவேவைப் போல் யார்" என்று அர்த்தம்.
- மீகா நாட்டுப்புறம் சார்ந்த (மொரேசா காதி) பகுதியிலிருந்து எருசலேமிற்கு விரோதமாக பிரசங்கிக்க வந்தார்.
- மீகா மேசியாவின் வருகையைக் குறித்த சில தீர்க்கதரிசனங்களை எழுதியுள்ளார்.
- யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் யூத ராஜாக்களுடைய நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தார்.

சமாரியா மற்றும் எருசலேமிற்கு விரோதமான நியாயத்தீர்ப்பு (மீகா 1 : 1–6)

- விக்கிரக ஆராதனை செயல்பாட்டில் இருந்தது (1:3–7, 6 : 16)
- ஐஸ்வரியவான்கள் ஏழைகளை தகாத முறையில் நடத்தினார்கள் (2 : 1–2, 8–9) தேவன் தன்னுடைய பரிசுத்த ஆலயத்தை விட்டு வெளியே வந்து தமக்காக போராடுவதை நம்மால் இங்கே பார்க்க முடிகிறது.
- மீகா யூதர்கள் மேல் வரக்கூடிய நியாயத்தீர்ப்பையும் நெருக்கடியையும் பார்த்தார். அவர், மக்கள் சிறைபட்டுப் போகிறதைக் கண்டு அவர்களை துக்கமடையச் சொன்னார். (1 : 16)

மனிதனுடைய திட்டம் மற்றும் தேவனுடைய திட்டம் (மீகா 2 : 1–5)

மனிதர்கள் தங்களுடைய தீய அலுவல்களில் திட்டம் தீட்ட ஆர்வமாக இருந்தார்கள். அவர்களுடைய இருதயம் கடினமாக இருந்ததினால் அவர்களுடைய தீய திட்டம் இன்னதென்று உணராதிருந்தார்கள். தேவனும் திட்டத்தைத் தீட்டுவார் என்பதை மறந்துவிட்டார்கள். தேவன் அவர்களுக்கு விரோதமாக பயங்கரமான ஒரு திட்டத்தை தீட்டியிருந்தார். (2:3)

கள்ளத்தீர்க்கத்தரிசிகள் (மீகா 2 : 6–13)

நாம் கள்ளத்தீர்க்கதரிசிகள் மிகவும் பயங்கரமானவர்கள் என்பதை பார்க்கிறோம்.

அவர்கள் தங்களுடைய பாவத்தில் இருந்து மாற தேவனுடைய வழி நடத்துதலை கேட்க விரும்பாதவர்களாக இருந்தனர். அதிகமாய் மதுபானத்தையும் திராட்சரசத்தையும் குறித்து தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் கூற வேண்டும் என மக்கள் விரும்பினார்கள். (2: 11)

அவர்கள் நலமானதைக் காட்டிலும் தீயதையே விரும்பினார்கள். தேவனுடைய வார்த்தைக்கு நம்முடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் தருகிறோமோ? சாத்தான் செய்கைகள், எல்லா வித போலியான அற்புதங்கள், அடையாளங்கள் அதிசயங்கள் மற்றும் தீமையானதைக் கொண்டு நம்மை வஞ்சித்து அழிவுக்கு வகை தேடுபவைகளாக இருக்கிறது என்று இந்த வசனங்கள் நம்மை எச்சரிக்கை செய்கின்றது. அவர்கள் உண்மையை விரும்பி இரட்சிக்கப்படுவதற்கு மனதில்லாமல் இருந்ததினால் கெட்டுப்போகிறார்கள்.

செயல்முறை: எந்த மாதிரியான உபதேசங்கள் உங்களை அதிகமாக கவருகின்றது ஏன்?

ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கிகட்டுக் கதைகளுக்கு சாய்ந்து





தேவனுடைய நியாயம் (மீகா 3 : 1–12)

மீகா அதிகாரம் மூன்றில் பல்வேறு யூத வர்க்கத்தின் தலைவர்களைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா அரசாங்க கிளைகளும் நேர்மையற்று கைக்குக் கை தீமை செய்பவர்களாக இருந்தார்கள். இந்த மூன்றாம் அதிகாரம் மூன்று பகுதிகளாகக் கொண்டுள்ளது.

- நியாயாதிபதிகளையும் அவர்களுடைய நேர்மையற்ற நியாயாசனத்தையும் எடுத்துரைக்கிறது (1–3)
- தீர்க்கதரிசிகள் தங்களுக்கு பணம் தருபவர்களை பற்றி மேன்மையாக பேசுவதைக் குறித்து எடுத்துரைக்கிறது.
- தலைவர்கள் பணத்திற்காக மற்றவர்களிடத்தில் ஆதரவு திரட்டுவதைப் பற்றி எடுத்துரைக்கிறது.

சுருக்கமாக இந்த அதிகாரம் நியாயத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. நியாயமானது யூதா தேசத்தை விட்டு விலகிச் சென்றது. தேவன் நியாயத்தை விரும்புகிற தேவனாகவும் அவருடைய சாயலில் நம்மை சிருஷ்டித்தவராகவும் இருக்கிறார். அதனால்தான் நாமும் நியாயத்தை தெரிவிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் அநீதியாய் இருக்கும்போது தேவனை பிரதிபலிக்காமல் இருக்கிறோம். அதன்பிறகு தேவன் நம்மேல் நியாயத்தீர்ப்பை கொண்டு வருவார்.

தேவனுடைய திட்டம் : (மீகா 4 : 1–13)

அதிகாரம் நான்கு நம்பிக்கையைத் தரக்கூடிய தீர்க்கதரிசனங்களைக் கொண்டு தொடங்குகிறது. அவர் பல்வேறு விதமான விடுதலையைப் பற்றி வெளிப்படுத்துகிறார்.

- தேவனுடைய நீதியை (தேவனுடைய வார்த்தை) அசட்டைப் பண்ணுவதிலிருந்து விடுதலை வச.2
- யுத்தத்திலிருந்து விடுதலை வச 3
- தேவைகளிலிருந்து விடுதலை வச 4
- பயத்திலிருந்து விடுதலை வச 4

தேவன் தாமே அவர்களுக்கு மேய்ப்பனாக இருப்பதைப் பற்றிய தீர்க்க தரிசனம் வச 6லிருந்து தொடங்குகிறது. "ஒருவனுடைய மேற்பார்வையில் ஆடுகள் கஷ்டத்தோடும், பசியோடும், முடிவில்லாத வேதனையோடும், துன்பப்படும். வேறொருவர் மேற்பார்வையில் செழிப்பாகவும், செம்மையாகவும் மற்றும் நிறைவாகவும் இருக்கும் என்பதை ஒருவர் கூறியுள்ளார். யூதருடைய மேய்ப்பர்கள் ஆடுகளை தகாத முறையில் நடத்தினால் தேவன் தாமே மேய்ப்பனாயிருந்து அவர்களை தன்னுடைய அக்கறையோடு கூடிய அன்பினால் சிறந்த செழிப்பான வழியில் நடத்துவார்".

நம்பிக்கையும் மீட்பும் (மீகா 5 : 1–15)

மேசியா வருகையே தேவனுடைய திட்டம். அவரே

- எல்லாவற்றிற்கும் மேய்ப்பர் ( 5 :4)
- சமாதானம் (5 : 5)

செயல்முறை : தேவனை எந்தெந்த சில விஷயத்தில் மேய்ப்பனாகவும் பார்க்கிறீர்கள்? ( தகப்பன், தாய், ஆசிரியர், தலைவர் ) நீங்கள் எப்படி இந்த குணாதிசயங்களை பின்பற்றுகிறீர்கள்?

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க

கடனாகிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும், உண்மையினாலும் அன்பு கூறக்கடவோம். 1 யோவான் 3 : 16 - 18

## மீகா புத்தகம் (மீகா 6 -7) நாள் 18

தேவனுடைய வழக்கு (மீகா 6 : 1-16)

இந்த அதிகாரம் நியாயசனத்தண்டையில் எப்படி நேர்மையான காரியங்களை நடைமுறைப்படுத்தலாம் என்ற கருத்துக்களோடு தொடங்குவதுபோல் தோன்றுகிறது. இங்கு தேவன் தாமே யூதா தேசத்திற்கு எதிராக தமது வழக்கைக் கொண்டு வருகிறார். அவர்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தபோது தேவன் அவர்களுக்கு தயவாய் இருந்ததை மறந்ததின் காரணமாக தேவன் அவர்களுக்கு எதிராக நிற்க வேண்டியதாயிற்று. அவர்களுடைய பாவ செயல்களுக்கு எது அடிப்படை காரணமாக இருந்தது? நன்றியில்லாத்தன்மை. நாம் எங்கிருந்து வந்தோம் என்ற நினைவு இருக்கிறதா? நம்மை இவ்வளவு காலம் யார் அழைத்து வந்தார்?

- ✦ தேவனுக்கு மிகவும் முக்கியமான காரியம் எது என்பதை தம்முடைய மக்கள் உணருவதற்காக அப்படிச் செய்தார். "நியாயம் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பது. (வ 6-8)
- ✦ தேவன் மறுபடியுமாக அவர்களுடைய கள்ளத்தனம் மற்றும் கபடு போன்ற பாவங்களுக்கு எதிராக தம்முடைய விசாரணையை கொண்டு வருகிறார். (வ 9-13)
- ✦ தேவன் அவர்களுடைய பாவத்திற்கு எதிராக தன்னுடைய நீதியை சரிக்கட்டுவார். இங்கு கவனித்து பார்க்கும்போது அவர்களுடைய தண்டனையானது அழிவாக இல்லாமல் அதற்கு பதிலாக அவர்கள் புசித்தும் திருப்தியடையாமலும், சேர்த்து வைத்தும் ஒன்றும் இல்லாமலும், விதைத்தும் அறுக்காமலும் இருப்பார்கள் என்பதே (வ 14-16)

நியாயத்தீர்ப்பும் வாக்குத்தத்தமும் (மீகா 7 : 1-20)

தேவன் யூதாவில் நீதியினுடைய கனிகள் இல்லாததைப் பார்த்தபோது மனவேதனையடைந்தார். தேவன் தம்முடைய மக்களிடம் இவ்வாறாக எதிர்பார்ப்பதற்கு எல்லா அதிகாரமும் உள்ளது. நீதியைப் பார்க்கிலும் துன்மார்க்கமாய் நடப்பதே அதிகமாய் இருந்தது. அவர் செயலற்ற சமுதாயத்தைப் பற்றி விவரிக்கிறார்.

- ✦ செயலற்ற ஒழுக்க முறையாமை (வ 2)
- ✦ செயலற்ற தேசத்தின் தலைமைத்துவம் (வ 3)
- ✦ செயலற்ற குடும்பம் (வ 6)

தேவனுடைய மகத்துவம், மீட்பு மற்றும் அவருடைய செயல்பாட்டு, முறைகளைப்பற்றியும் இதைப்போன்று வேறு எதுவும் இல்லை என்றும் மீகா தேவனை துதிக்கிறார் அவருக்கு நியாயத்தீர்ப்பு வரும் என்று தெரியும். மக்கள் பாபிலோனுக்கு கொண்டு போகப்படுவார்கள். இந்தப் புத்தகம் நிறைவடையும் போது அவர் பிற்காலத்தில் குறிப்பிட்ட வகையில் மற்றொரு மீட்பையும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு கொண்டுவரவும் பார்க்கிறார். (வ 8 - 13 15-17)

தமது சுதந்திரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? இதுவே வசனத்தின் ஆய்வுப் பொருள் (வ 18) (மீகா என்பதற்கு யெகோவாவைப் போல் யார் என்று அர்த்தம்)



மீகாவில் கவனித்துப்பார்க்க வேண்டியது, தேவன் எப்படி மக்களை மீட்டார் என்பதைப் பற்றியல்ல, எப்படி அவர்களுடைய பாவத்தை மன்னிக்கவும் இரக்கத்தை காண்பிக்கவும் தயாராக இருந்தார். இதன் மூலமாக தேவனுடைய அழியாத மகத்துவத்தைப்பற்றி அவர் முடிவுரை செய்கிறார்.

செயல் முறை : தேவனுடைய வார்த்தையை உங்களுக்கு போதித்த சீஷர்களின் பெயர்களை பட்டியலிடு மற்றும் நீங்கள் உங்கள் நன்றியை தெரிவிக்க ஏதேனும் சில காரியங்களை செயல்படுத்துங்கள்.

1. 2. 3.

அன்றியும் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். - எபி 13 : 16

## நாகூம் புத்தகம் (நாகூம் 1 - 3) நாள் 19

அறிமுகவுரை :

- ✦ நாகூம் என்ற பெயருக்கு "ஆறுதல்" அல்லது "தேற்றுகிறவர்" என்று அர்த்தம். ஆனால் அவருடைய செய்தி நினிவேவிற்கு இன்பத்தை தராததாக இருந்தது. நினிவேவைப் பற்றின அவருடைய தீர்க்கதரிசனம் அழிவை பற்றியதாயிருந்தது.
- ✦ நினிவே நகரமானது யோனா பிரசங்கத்தினால் 100 ஆண்டுகளுக்கு முன்பு மனந்திரும்பினதாக இருந்தபோதிலும் இப்பொழுதோ அவளுடைய பாவத்தினிமித்தம் தேவனுடைய கையிலிருந்து அழிவை கொண்டுவரச் செய்தது.
- ✦ இந்த சிறந்த தலைநகரமானது கிமு 612ல் வீழ்ந்தது மற்றும் இதன் தேசமாகிய அசீரியாவும் சில ஆண்டுகள் கழிந்து முடிவுக்கு வந்தது. இந்த நிகழ்ச்சிகளுக்கு சற்று முன்பே இந்தப் புத்தகம் நிறுவப்பட்டது.
- ✦ புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படாத அல்லது எடுத்துக்காட்டப்படாத ஏழு பழைய ஏற்பட்டு புத்தகங்களில் இதுவும் ஒன்று (மற்ற பிற புத்தகங்களாவன எஸ்றா, நெகேமியா, எஸ்தர், பிரசங்கி, உன்னதப்பாட்டு மற்றும் ஒபதியா)

நினிவேயின் வீழ்ச்சி (நாகூம் 1: 1-7)

- ✦ தேவன் எரிச்சலுள்ளவரும், தம்முடைய நியாயத்தின் நீதியைச் சரிக்கட்டகிறவருமானவர் (1:2)
- ✦ தேவன் நீடிய சாந்தமுடையவரும், ஆக்கினையில்லாமல் தப்புவிக்கமாட்டார். (1:3)
- ✦ தேவன் இயற்கையை அடக்கி அதனை தம்முடைய ஆக்கினைக்கு பயன்படுத்துவார். (1: 3 - 6)
- ✦ அவருடைய வல்லமையும், அரசாளுந்தன்மையும் அவரை நம்புகிறவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கிறது. அவர் இக்கட்டு நேரங்களில் அரணான கோட்டை (1:7)

நினிவேவுடைய பாவங்கள் (நாகூம் 1: 8, 3 : 19)

- ✦ தேவனுக்கு விரோதமாக பொல்லாங்கானதை செய்கிறார்கள் (1 : 11)
- ✦ முழுவதும் விக்கிரக ஆராதனையால் நிரம்பியிருந்தது. (1 : 14)
- ✦ முழுவதும் வஞ்சகத்தினாலும் கொள்ளையினாலும் நிரம்பியிருந்தது (3 : 1)

ஊ தகாத மற்றும் தவறான நோக்கமுடைய மக்கள் (3 : 4)

அதிகப்படியான தீர்க்கத்தரிசனங்கள் கவிதை நடையில் இந்த நகரத்தின் மோசமான வீழ்ச்சியைப் பற்றி தெரிவிக்கின்றன. இந்த புத்தகத்தில் தேவனுடைய மக்களுக்கு ஆறுதலாக இருப்பதென்னவென்றால், அவர்களை துன்பப்படுத்துபவர்கள் அவர்களுடைய

பலனை அனுபவிப்பார்கள் என்றும் இறுதியில் தங்களுக்குத் தக்கதை தேவனுடைய கையிலிருந்து பெறுவார்கள் என்பதுமே.

ஆசீரியாவின் வீழ்ச்சியைப்பற்றின செய்தியை கொண்டுவருகிற தூதுவன் சிறந்த செய்தி மற்றும் சமாதானம் கொண்டுவருபவனாக வரவேற்கப்படுவான் (1 : 15) இந்தப் புத்தகம் கீழ்வரும் வார்த்தைகளால் நிறைவடைகிறது. உன்னுடைய வீழ்ச்சியைப் பற்றின செய்தியை கேள்விப்பட்டவர்கள் கைக் கொட்டாமலிருப்பார்களோ? உன்னுடைய கொடுங்குணத்தை உணராதவர்கள் யார்? இந்த நகரமானது நூற்றாண்டுகளாக தேவனுடைய வார்த்தையில் பிரகாரமாக மனிதனுடைய கண்களுக்கு முன்பாக மறைந்து போயிற்று.

செயல்முறை : விசுவாசத்தில் போராடுகிற சீஷருடன் நேரம் செலவு செய்து அவருடன் ஜெபம் செய்யுங்கள் .

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான் ; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார். பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான் ; அவன் சத்துருக்களின் கஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார். அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுதையும் மாற்றிப் போடுவீர். சங் 41 : 1-3

## ஆபகூக் புத்தகம் (ஆபகூக் 1 – 3) நாள் 20

அறிமுகவுரை :

- ✦ அவருடைய பெயருக்கு மேற்கொள் என்று அர்த்தம்.
- ✦ ஆபகூக் யூதா தேசத்திற்காக (தெற்கு ராஜ்ஜியம்) எழுதினார்.
- ✦ இந்தப் புத்தகம் தேவனுக்கும் தீர்க்கத்தரிசிக்கும் இடையே நடந்த உரையாடல் போன்ற வடிவத்தில் அமைந்துள்ளது. எவ்வளவு நாட்களுக்குள் தேவன் தன்னுடைய சொந்த தேசத்தின மக்களுடைய பாவங்களை விசாரிக்கப்போகிறார் என்று தேவனிடத்தில் கேட்டார். பின்னும் அவர் தேவனை நோக்கி துஷ்ட ஜனத்தாரைக் கொண்டு தேவனுடைய மக்களுக்கு அழிவை வரப்பண்ணுவது எப்படி என்று கேள்வி எழுப்புகிறார்.
- ✦ அவர் இறுதியில் தேவனுடைய பதில்களை புரிந்து கொண்டு கவிதை நயத்தோடு எழுதி முடிக்கிறார்.

ஆபகூக்கின் முதல் கேள்வி (ஆபகூக் 1 : 1-4)

தீர்க்கதரிசி மக்களிடையே காணப்பட்ட துன்மார்க்கமான செயல்களை கண்டு எரிச்சலடைகிறார். தேவன் ஏன் இந்த விஷயத்தில் குறுக்கிடவில்லை என்று தெரிந்து கொள்ள விரும்பினார்.

தேவனுடைய பதில் (ஆபகூக் 1 : 5-11)

தேவன் கல்தேயரை கொண்டு யூதாவின் அழிவைக் குறித்து பேசுகிறார்.

கல்தேயர் துர்க்குணம் கொண்டவர்களாக இருந்தபோதிலும் (வ 6-11) தேவன் அவர்களை தன்னுடைய நியாயத்தீர்ப்புக்கு ஒரு கருவியாக பயன்படுத்த உள்ளார்.

ஆபகூக்கின் இரண்டாவது கேள்வி (ஆபகூக் 1 : 12 – 2 : 1)

இப்படிப்பட்ட துஷ்ட ஜனங்களை தேவன் இவ்விதமாய் ஏன் பயன்படுத்தினார்?



தேவனுடைய பதிலைக் குறித்து ஆபகூக் அதிர்ச்சியடைந்தார். ஆபகூக் தேவனுடைய பதிலுக்காக தன்னை காவற்காரனைப் போல் காத்து நிற்கப்போவதாக நிச்சயித்துக் கொண்டான்.

தேவனுடைய பதில் (ஆபகூக் 2 : 2 – 20)

- ✦ கல்தேயரின் குணாதியங்களைப் பற்றி தேவனுக்குத் தெரியும்.
- ✦ தேவனுடைய பதிலோ "தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்பதே (வ – 4)
- ✦ விசுவாசமானது கடினமான நேரங்களில் போராடி மேற்கொள்ள உதவி செய்யும்.
- ✦ தேவன் கல்தேயருக்கு தொடர்ச்சியான ஐந்து துயர சம்பவங்களைப் பற்றி கூறுகிறார்.

ஆபகூக்கின் ஸ்தோத்திர பாடல் (ஆபகூக் 3 : 1-19)

- ✦ தேவனுடைய வழிகளை தீர்க்கதரிசி அறிந்தவுடனே தேவனுக்கும் அவருடைய திட்டத்திற்கும் பயபக்தியாய் இருந்தார்.
- ✦ தேவனுடைய நீதியான காரியங்களை செயல்படுத்த அவருடைய நியாயத் தீர்ப்பின் மூலமாக அருளிய அற்புதங்களை நினைவு கூறுகிறார்.

எல்லா நேரங்களிலும் தேவனுடைய திட்டத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. ஆனாலும் நாம் அவருடைய திட்டங்களுக்கு எப்போதும் கீழ்படியவும் விசுவாசிக்கவும் கூடும்.

செயல்முறை : எந்தெந்த சில தேவனுடை ய திட்டங்களை நாம் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறோம்?

"அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டடவர்களாய் தேவனிடத்தின் அன்பு கூறுகிவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். – ரோமர் 8 : 28"

## செப்பானியாவின் புத்தகம் (செப்பானியா 1-3) நாள் 21

அறிமுகவுரை

- ✦ கர்த்தரால் மறைத்து வைக்கப்பட்டவன் என்பது இந்த தீர்க்கத் தரிசியினுடைய பெயரின் அர்த்தம்
- ✦ எஸ்கியாவின் நான்கு தலைமுறைகளுக்கு முன்பான முன்னோர்களை பற்றி 1:1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ✦ இதில் குறிப்பிடப்பட்டுள்ள யூதா மற்றும் எருசலேமின் நிலையைப் பார்க்கும்போது யோசியாவின் சீர்திருத்த செய்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிகிறது.
- ✦ இவர் எருசலேமிலிருந்து வந்த தீர்க்கதரிசி என்பது மட்டும் நமக்கு தெரியும். வேறொன்றும் நமகது இவரைப்பற்றி தெரியாது.
- ✦ உக்கிரமான பாவத்தை எதிர்த்து தேவனுடைய நீதியான கடும் கோபத்தை இவருடைய எழுத்துக்களில் நாம் காணலாம் . தேவ வருகையின் நாளைக்குறித்து இவர் கவனம் செலுத்தியிருக்கிறார் !

யூதாவின் அழிவு (செப் 1 : 1 – 2 : 1)

- ✦ அவர்களுடைய அழிவு முற்றிலும் வாரிக்கொள்ளும் படியானது (1 : 2 – 3)
- ✦ யூதாவிலிருந்து அழிவு ஆரம்பித்தது (1 : 4 – 13) (பாகாலை வழிப்பட்டதால் அதிக அழிவு வானசேனையை, வழிபடுவது (வசனம் 5) அந்நியர்களின் பழக்கவழக்கங்களை பின்பற்றுதல் (வசனம் 8-9)

✦ அழிவு கர்த்தருடைய பெரிய நாள் என்று அழைக்கப்பட்டது (1 : 14-18) தம்முடைய நீதியினால் உண்டான தேவ கோபாக்கினையை இது காண்பிக்கின்றது.
✦ மனத்தாழ்மையுடையவர்கள் மட்டும் அழிவுக்கு தப்பிக்கொண்டார்கள் (2 : 1-3) (தேசம் அழிக்கப்பட்ட போதிலும் மனத்தாழ்மையுள்ளவர்களுக்கு மட்டும் நம்பிக்கை இருந்தது)

சுற்றியிருந்த தேசங்களின் அழிவு (செப் 2 : 4- 3 : 18)

(1) பெலிஸ்தியா(வசனம் 47), (2) மோவாப் மற்றும் அம்மோன் (வசனம் 8-11) (3) எத்தியோப்பியா, எகிப்து என்றும் அழைக்கப்படுகிறது. (வசனம் 12) (4) அசீரியா (வசனம் 43 - 15) மற்ற தேசங்களின் அழிவைப்பார்த்து கற்றுக்கொண்டு மனத்திரும்புவார்கள் என்று தேவன் எதிர்பார்த்தார். ஆயினும், யூதா மனந்திரும்பாமற் போயிற்று (3 : 6-7). ஆகையால் தேவன் தம்முடைய சினமாகிய உக்கிரகோபத்தினாலும் எரிச்சலினாலும் பூமியையெல்லாம் அழிக்க தீர்மானித்தல்.

அழிவு மீதியாகி இருந்தவர்களை உண்டாக்கியது (செப் 3 : 9-20)

மீதியானவர்கள் தம்மை சேவிக்குபடியாகவும், தம் நாமத்தை கூப்பிடுவோரைப் பற்றியும் தேவனின் கனவு மீதியானவர்களின் குணாதியங்களாவன : -

✦ சுத்தமான உதடுகளைக் கொண்டு கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் (வசனம் 9)
✦ காணிக்கை கொண்டு வருவது (வசனம் 10)
✦ சிறுமையும், எளிமையுமாயிருந்து கர்த்தருடைய நாமத்தின் மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்
✦ பொய் பேசாதவர்கள் (வசனம் 1-3)

மீதியானவர்களைக் குறித்து தேவன் மகிழ்ச்சியடைந்தார். அவர்களில் களிகூர்ந்தார். அவர்களுக்காக பாடினார். நாம் மறுபடியும் தேவனுடைய இருதயத்தை இங்கு பார்க்கிறோம். தம் மக்களோடு, நெருங்கிய உறவுக்காக தேவன் எப்படி ஏங்குகிறார். தேவனுடைய மக்களில் நாம் மீதியானவர்களாக இருக்கிறோமோ? அவரின் மேல் நம்பிக்கை கொண்டவர்களாக நாம் இருக்கிறோமா? அல்லது அவருடைய உக்கிரத்தினால் அழிந்து போனவர்களாக நாம் இருக்கிறோமா? நாம் நம்மை தாழ்த்தி தேவனிடம் நெருங்குவோமாக.

செயல்முறை : உங்களுக்குப் பிரியமான பாடலை தேவனுக்குப் பாடி அவருக்குள் களிகூருங்கள் களிகூருங்கள்.

தேவனுடைய நாமத்தை பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமை படுத்துவேன்.... இதுவே கர்த்தருக்கு பிரியமாயிருக்கும். - சங்க 69 : 30-31.

---

## ஆகாயின் புத்தகம் (ஆகாய் 1-2) நாள் 22

---

அறிமுகவுரை :

ஆகாய் (கொண்டாடுகிறவர் என்று அர்த்தம்) சகரியாவுடன் இணைந்து தேவாலயத்தை மறுபடியும் சுட்டுவதற்காக மக்களுக்கு அழைப்பு விடுத்தார். தேவாலயத்தின் அஸ்திபாரம் 16 ஆண்டுகளுக்கு முன்பாகவே மிகுந்த உற்சாகத்தோடு போடப்பட்டது (எஸ்றா 3 : 12), ஆனால் சுற்றியிருந்த மக்களிடமிருந்து உபத்திரவத்தை அனுபவித்த போதோ (எஸ்றா 4 : 15), யூதர்கள் நம்பிக்கையை இழந்துபோனார்கள். இந்த தீர்க்கதரிசனம். (கி.மு. 520) நான்கு மாதத்திற்குள்ளாக அளிக்கப்பட்டு நான்கு விரிவான செய்தியைக் கொண்டது.



தேவாலயத்தை மறுபடியும் கட்டுதல் (ஆகாய் 1 : 1- 15)

ஆகாய் தன்னுடைய செய்தி தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை தெளிவாக வெளிப்படுத்தினார்.அவருடைய புத்தகத்தில் 38 வசனங்களில், 26 முறை கர்த்தர் உரைக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார். தேவாலயத்தை நான்கே ஆண்டிற்குள் கட்டி தனக்கு ஒப்புவிக்கப்பட்ட வேலையை முடித்தார் (எஸ்றா 6 : 15) தேவனுடைய வீடு பாழாய்க் கிடக்கும் போது மக்கள் தங்களுடைய வீடுகளை கட்டுவதில் தீவிரமாயிருந்தார்கள் மக்கள் தங்களுடைய முக்கியத்துவங்களை தவறாய் செலுத்தியதால் அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்பட்டது என்று தேவன் அவர்களுக்கு நினைப்பூட்டினார் (வசனம் 5-10). இந்த செய்தியை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்கள் 3 வாரங்கள் எடுத்துக்கொண்டார்கள் (வசனம் 15) தவறான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுததினால் நமக்கு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறதா?

முந்திய மகிமையைக் காட்டிலும் மேலான பிந்திய மகிமை (ஆகாய் 2 : 1-9)

இரண்டாவது செய்தி, மக்களை உண்மையினிடத்திற்கு திரும்பும்படியான அழைப்பு. உண்மையாகவே தேவன் அவர்களோடு இருந்தார். முந்திய ஆலயத்தை நினைவுகூர்ந்தவர்கள் புதிய ஆலயத்தைக் குறித்து ஏமாற்றமடைந்தார்கள் (வசனம் 5) தேவாலயத்தை மறுபடியும் கட்டுவதால் மேசியாவை வரவழைக்கும் திட்டத்தை தேவன் நினைப்பட்டினார் (வசனம் 9) அப்படியென்றால் ஆவிக்குரிய மகிமை இன்னும் மேன்மையானதல்லவா !

கஷ்டங்கள் - தெய்வீக சிட்சை (ஆகாய் 2 : 10-19)

தேவன் தம் மக்களை பரிசுத்த இருதயமுள்ளவர்களாயிருக்கும்படி அழைப்பு விடுத்தார். நிர்விசாரத்திற்கல்ல என்பதற்காக ஒரு எடுத்துக்காட்டை பயன்படுத்தினர. பரிசுத்த மாம்சம் எதையெல்லாம் தொடுகிறார்களோ அதெல்லாம் தீட்டுப்படும். இதை இப்படியும் கூறலாம். ஆரோக்கியமுள்ள நபரோடு பழகுவதால் ஆரோக்கியமில்லாதவர் சுகம் பெற முடியாது. ஆனால் நோய்வாய்ப்பட்ட நபரோடு பழகுவதால் நோய் வாய்பட நேரிடும். பரிசுத்த செய்கைகள் ஒருவரை பரிசுத்த மாக்காது என்பது தேவனுடைய எண்ணம். ஆனால் அவர்களுடைய இருதயங்கள் பரிசுத்தமாயிருந்தால், பரிசுத்த காரியங்களை செய்யலாம் எனபதே. நற்காரியங்களை செய்வதினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது. ஆனால் நாம் இரட்சிக்கப்பட்ட காரணத்தினால் நன்மை செய்கிறோம்.

இறுதியான ஆசீர்வாதமாகிய மேசியாவின் வருகை (ஆகாய் 2:20-23)

கிறிஸ்துவைப் போல செருபாபேல் உறுவகப்படுத்தப்பட்டிருக்கிறார்.இயேசுவின் வம்சவழியில் அவரும் ஒருவராக இருக்கிறார். (மத்தேயு 1 : 12-13) முந்திய தேவாலயத்தை மறுபடியும் கட்டுவது பிந்திய தேவாலயமான கிறிஸ்து பின் சபையைக் கட்டுவதற்கு வழிவகுக்கிறது என்ற நோக்கத்தை அடைந்துவிட்டதாக இந்த தீர்க்கதரிசனம் முடிவடைகிறது.

செயல்முறை : எதற்கு, எங்கே உங்களது நேரத்தையும் பணத்தையும் முதலீடு செய்கிறீர்கள்?

பரலோகராஜ்ஜியம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது ; அதை ஒரு மனுஷன் கண்டு மறைத்து , அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான் - மத் 13 : 4

## சகரியா புத்தகம் (சகரியா 1 – 2) நாள் 23

அறிமுகவுரை :

- ✦ சகரியா என்னும் பெயருக்கு "தேவன் நினைவில் கொள்பவர்" என்று அர்த்தமாம். மீட்பு காலத்தில் ஆகாயுடன் பணி புரிந்தார்.
- ✦ கிமு 538ல் செருபாபேலின் தலைமையில் சிறைபட்டு மீட்கப்பட்டார்கள். வந்தவுடனே ஆலயத்தின் கட்டுமான வேலை மறுபடியும் தொடங்கிற்று.
- ✦ பதினாறு ஆண்டுகள் ஆகியும் கட்டுமான வேலை முடிவுக்கு வராததாக இருந்தது. ஆகாய் கட்டுமான வேலையின் தொகுப்பை தீர்க்கத்தரிசனத்துடன் (பிரசங்கம்) ஆரம்பித்தார். அவருடன் சகரியாவும் சேர்ந்து கொண்டார்.
- ✦ அவர்களுடைய வேலையின் பயனாக ஆலயமானது கிமு 516ல் கட்டி முடிக்கப்பட்டது. (எஸ்றா 6 : 15)

முதல் தரிசனம் : புனிதமான காலத்தின் இடையே ஒரு மனிதன் (சகரியா 1 : 1–17)

- ✦ தேவனுடைய தூதர்கள் இந்த உலகத்தை நன்கு ஆராய்ந்து தேவன் இந்த ஆலயத்தின் புதுப்பிக்கும் பணியை வெற்றிகரமாக முடிப்பார் என்ற நம்பிக்கையை ஊட்டுவதே தரிசனத்தின் அடிப்படை செய்தியாகும்.
- ✦ எல்லா தேசங்களும் தேவனின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. குதிரையின் வண்ணங்கள் கீழ்வருபவைகளைக் குறிக்கின்றன. போர் (சிவப்பு), பஞ்சம் (மங்கின நிறம்) மற்றும் வெற்றி (வெள்ளை)
- ✦ தேவன் எல்லா தேசங்களுக்கும் அதிகாரியாக இருக்கிறார் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இறுதியில் தேவனுடைய திட்டமே வெற்றிபெறும் என்று விசுவாசிக்கிறீர்களா?

இரண்டாவது தரிசனம் ; நான்கு கொம்புகள் நான்கு தொழிலாளிகள் (சகரியா 1 : 18 – 21)

- ✦ தேவனுடைய தேசத்தை சிதறடித்த வல்லமை (பிற நாடுகள்)
- ✦ நான்கு என்பது உலகின் (பிரபஞ்சம்) எண்.
- ✦ இஸ்ரவேலரைத் துன்பப்படுத்திய தீய சக்தியை விரோதமாக அவர்களை அழிக்க தேவன் (கொல்லன்) தொழிலாளர்களை கருவிகளாக பயன்படுத்தினார்.
- ✦ எதிரிகளுடைய எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் மக்கள் இந்த ஆலயத்தை கட்டி முடிக்க முடியும் என்பதே இந்தத் தரிசனத்தின் அடிப்படைச் செய்தியாகும். எந்த சக்தியும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற தடையாய் இருக்க முடியாது.

மூன்றாவது தரிசனம் : அளவுநூல் உடைய ஒரு மனுஷன் (சக 2:1 – 13)

- ✦ எருசலேமின் மக்கள் அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றியும் சரீர நிலைமையைப் பற்றியும் கவலைப்பட்டார்கள்.
- ✦ தேவன் அவர்களையும் அவர்களுடைய தேவைகளையும் முற்றிலும் பாதுகாப்பார் என்பதே இதன் கருத்து.
- ✦ தேவன் மேசியா வருகிற காலத்தைக் குறித்தும் (வ10–13) அவர் மூலமாக இந்த உலகம் ஆசீர்வதிக்கப்படும் என்பதையும் தெரிவிக்கிறார்.
- ✦ சிறைப்பட்டுப்போனவர்கள் திரும்பி சொந்த தேசத்திற்கு வர வேண்டும் என்பதே தேவனுடைய திடமான திட்டம் என்று நாம் காண்கிறோம். (வ 6–47) நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் முதலாவது தேடும்போது நம்முடைய தேவைகள் சந்திக்கப்படும்.



செயல்முறை : குடும்ப சபையின் / சபையில் ஒற்றுமைக்காக ஜெபிக்கவும். உங்கள் குடும்ப சபையில் உள்ள அனைத்து சீஷர்களுக்காகவும் ஜெபிக்கவும்

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணவும் அதன் பொருட்டு மிகுந்த மன உறுதி யோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் – எபேசி 6 :18

## சகரியா புத்தகம் (சகரியா 3 – 4) நாள் 24

நான்காம் தரிசனம் : பிரதான ஆசாரியர்களுக்கான பரிசுத்த ஆடைகள் (சகரியா 3 : 1 – 10)

- ❖ யோசுவா, ஆசாரியத்துவத்தை குறிக்கிறது.
- ❖ சாத்தான், ஆசாரியத்துவத்தின் தகுதியின்மையை குறித்து குற்றம் சாட்டுபவனாக இருந்தான். ஏனெனில், அவர்களுடைய முன் பாவமான நடவடிக்கையை குறித்தே (அசுத்தமான ஆடைகள்)
- ❖ தேவன் அவர்களை தங்களுடைய பாவங்களிலிருந்து மன்னித்து அவர்களை ஆசாரியத்துவத்தின் தங்களுடைய பாவங்களிலிருந்து மன்னித்து அவர்களை ஆசாரியத்துவத்தின் ஊழியத்திற்கு சீர்பொருத்தினார் (பரிசுத்த ஆடையின் வெளிப்பாட்டின் மூலமாக
- ❖ ஆசாரியர்கள், வரப்போகும் பிரதான ஆசாரியர்களை குறிக்கும் அடையாளமாய் இருந்தார்கள். அதுவே கிளை எனப்படும்.
- ❖ பாறை சபையை குறிக்கக்கூடியது (தானியேல் 2:34–45) இல் காண்கின்ற கண்கள் தேவனின் பரிபூரணமான அக்கறையை குறிக்கின்றது.
- ❖ ஒரே நாளில் பாவங்கள் கழுவப்படுவதால், இயேசுவின் சிலுவை பலியைக் குறிக்கிறது

நாமும் இன்றைக்கு தேவனின் சிறப்பான ஆசாரியர்கள் (1 பேதுரு 2 : 9) பிறப்பினால் அல்ல ஆயினும் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக நம் எல்லா பாவங்களும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. (வெளி 1 : 6)

ஐந்தாம் தரிசனம் : பொன்னினால் செய்யப்பட்ட குத்து விளக்கும், இரண்டு ஒலிவ மரமும் (சகரியா 4 : 1–14)

- ❖ குத்து விளக்கு, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கூறப்படும் பரிசுத்த இடத்தை குறிக்கிறது.
- ❖ முன்னாள் தரிசனத்தில், பிரதான ஆசாரியர்கள் பரிசுத்தமாக்கப்பட்டார்கள். இப்பொழுது, நாட்டிலுள்ள மக்கள் வாழ்விடங்களும் தேவனுடைய பாதுகாப்பிற்குள் வந்துவிட்டது. (செருபாபேல்)
- ❖ வெற்றியின் காரணம் என்னவெனில் தேவன் மலைகளை (தடைகளை) அவர்களுக்காக அகற்றினார் பின்பும் வெற்றியானது தேவனின் வல்லமையை கொண்டுள்ளதே தவிர மனிதனின் வல்லமையை கொண்டு அல்ல
- ❖ இரண்டு ஒலிவே மரங்கள், குத்து விளக்குகளுக்கு தொடர்ச்சியாக எண்ணெயை தந்தது, இந்த காரியங்கள் யோசுவாவும் செருபாபேலும் ஆலயத்தின் கட்டும் பணிகளை குறிக்கிறதாய் இருக்கலாம்.

நமக்கு மெய்யான விதமாக எண்ணெய் தருபவர் ஆசாரியாரானவரும், தீர்க்கதரிசியானவருமான இயேசு கிறிஸ்துவே ஆவார். அவரே நமக்கு பரிசுத்த ஆவியை வல்லமையாக தருபவரும் ஜிவத்தண்ணீரை நீரூற்றைபோலவும் அருளுகிறவராய் இருக்கிறார்.

செயல்முறை : சாத்தானின் குற்றச்சாட்டுகளும் மற்றும் உங்கள் வாழ்வில் வெவ்வேறான பாகங்களில் தேவனின் வாக்குகளும் பற்றி எழுதுங்கள்.

| பகுதி | சாத்தானின் குற்றச்சாட்டு | தேவனின் வாக்குத்தத்தம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

" நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலாய்த் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும் மாம்சத்தினாலேயோ பாவப் பிரதமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன். ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின் படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்திர்ப்பில்லை, கிறிஸ்து இயேசுவினாலே ஜிவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே – ரோமர் 7 : 25 – 8 : 2 "

---

## சகரியா புத்தகம் (சகரியா 5 – 6) நாள் 25

---

ஆறாம் தரிசனம் பறக்கும் சுருள் (சகரியா 5 : 1–4)

- சுருளானது, மக்களின் இரண்டு குறிப்பான பாவங்களுக்காக நியாத்தீர்பைக் கொண்டது அந்த பாவங்களாவன, ஒருவரிடத்தில் ஒருவர் திருடுவதும் பொய்யாய் ஆணையிடுவதுமே,
- ஜனங்கள் பொருளாசை உடையவர்களாய் இருந்தார்கள்.

போதும் என்கின்ற வாழ்க்கையை வாழ கற்றுக்கொள்வதே சந்தோஷமாக வாழ்வதற்கான ரகசியம். தேவன் நம்மை எல்லா சூழ்நிலையிலும் வைப்பதின் காரணம், நாம் போதுமென்ற மனதுடன் இருந்து தேவனை மகிமைப்படுத்துவதற்கே.

ஏழாம் தரிசனம் : கூடையில் உள்ள பெண்மணி (சகரியா 5 : 5 – 11)

- கூடையில் உள்ள பெண்மணி, மக்களின் பாவத்தை குறிக்கிறது. மக்களின் அவ்விசுவாசமே பெண்மணியாக சித்தரிக்கப்பட்டுள்ளது.
- தேவன், ஜனங்களின் பாவம் அனைத்தையும் எருசலேமிலிருந்து மிக தொலைவாக எடுத்துப் போடுகிறார்.
- செய்தியானது என்னவென்றால், தேவன் ஜனங்களின் பாவங்களுக்கு சில விதமான தடைகளை வைத்திருப்பதே
- பாவமானது, அழிவின் விதைகளை கொண்டது. எல்லா பாவத்தின் முடிவும் மரணம், ஆயினும் மனந்திரும்புதலினால் நம்பிக்கை உண்டு.

எட்டாம் தரிசனம் : நான்கு இரதங்கள் (சகரியா 6 : 1–8)

- இரதங்களாவது தேவன் தம்முடைய ஜனங்களை மற்ற எல்லா நாடுகளிலிருந்தும் பாதுகாக்கும் பாதுகாப்பை குறிக்கிறது.
- தேவன், தம்முடைய ஜனங்களுக்காக இறுதியாக சமாதானத்தை வைத்திருக்கிறார்.
- தேவன் நமக்காக சமாதானத்தை வைத்திருக்கிறார். அது எல்லா அறிவுக்கும் மிஞ்சினதான சமாதானமே நாம் தேவனிடத்தில் சரணடைவதே பூரண சமாதானத்தைத் தரும். நம்முடைய வாழ்வு பரிசுத்த ஆவியின் மூலமாக வழிநடத்தப்படுவது முழு சமாதானத்தை தரும்.



யோசுவாவின் கீரீடம் (சகரியா 6 : 9–15)

- கீரிடமானது பொன்னினாலும், வெள்ளியினாலும் செய்யப்பட்டது வரப்போகும் கிளையிலிருந்து குறிக்கப்படும் இரண்டு செயல்களாகிய ஆசாரியத்துவதையும், இராஜத்துவத்தைப் பற்றியும் குறிப்பிடுகிறது.
- சபை நிறுவப்பட்டபோது இயேசுவே பிரதான ஆசாரியராகவும், தமது ராஜ்ஜியத்தின் இராஜாவாகவும் இருக்கிறார்.

கிறிஸ்துவே நீதியின் இராஜா, எருசலேமின் இராஜா, சமாதானப்பிரபு, மற்றும் பெரிய பிரதான ஆசாரியர். அவருடைய இரண்டு செயல் முறைகளும் இன்றும் தொடர்கிறது. நமக்கு சமாதானமும், தேவனுக்கும், பாவிகளுக்கும் இடையே உள்ள சமாதானத்தையும் குறிக்கிறது.

செயல்முறை : பொருளாதார தேவைகளை குறித்து உங்கள் வாழ்வில் நீங்கள் திருப்தியடையாமல் உள்ள காரியங்கள் யாவை ?

போதுமன்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் – 1 தீமோ 6 : 6 – 9

---

## சகரியா புத்தகம் (சகரியா 7 – 8) நாள் 26

---

நீதியும், இரக்கமும், உபவாசமின்மை (சகரியா 7 : 1 – 14)

- பெத்தேலிலிருந்து சில தலைவர்கள் உபவாசத்தைப் பற்றி தெரிந்துக்கொள்ள வந்தார்கள். மோசேயின் நியாயப்பிரணத்தின் பிரகாரம் ஒரே ஒரு உபவாசம் தேவைப்பட்டது. அது குற்ற நிவாரண பலியின் நாளே.
- தேவன், அவர்களிடத்தில் அவர்கள் உபவாசத்தின் காரணங்களை தெரிந்துக்கொள்ள கேள்விகளை கேட்டார். (வ. 4 – 7)
- தேவன், அவர்கள் அவர்களுக்காகவே உபவாசம் இருக்கிறார்கள் என்றும், தேவனுக்காக அல்ல என்றும் கூறினார். (வ–5)
- தேவன் அவர்களிடத்தில் மற்றவர்களை நீதியுடன் நடத்த வேண்டும் என்று கட்டளையிட்டார் (வ 8 – 14)
- அன்புக்கும், நீதிக்கும் பதிலாக நமது வாழ்வில் உபவாசமும், ஜெபமும் இணையாக எண்ணப்படலாகாது.
- தேவன் அவர்களின் இருதயத்தையும், அதன் நோக்கத்தையும் குறித்தே முக்கியமாக எண்ணினார். ஆனால் மதத்தையும் அதன் நியமனத்தையும் அல்ல.
- தேவனை நாம் அன்பு செய்யாமலும் மற்றவரை அன்பு செய்யாமலும் இருந்தால் நமது இருதயம் கடினமும், கல்லைப்போலாகும் ஏனெனில் நாம் வெளித்தோற்றத்தையே கவனம் செலுத்துவதினால். (வ 12)

நாம் எவற்றின் மீது அதிக கவனத்தை தர வேண்டும் இருதயத்தையா அல்லது வெளித்தோற்றத்தையா ? எதை எளிதாக பின்பற்ற முடியும், உபவாசம் செய்வதையா அல்லது நீதியாக மற்றவரை நடத்துவதையா ?

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் (சகரியா 8 : 1–23)

- எதிர்காலத்தை குறித்து பத்து உற்சாகம் தரும் காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆரம்பமும் அறிவுப்புக்களாக இருந்தது வேதனாகிய கர்த்தர் இதையே கூறுகிறார்.

- ❖ இது உடனடியான ஆசீர்வாதங்களையும், மேசியா காலத்தின் ஆசீர்வாதத்தையும் பற்றி கூறுகிறது.
- ❖ இந்த ஆசீர்வாதத்தின் வாக்குறுதிகள் நிபந்தனைக்குட் பட்டது (வ 16 – 17) தேவன் நீதியை நடப்பிக்கவே அழைத்தார்.
- ❖ தேவன் உபவாசத்தைக்காட்டிலும் விழாகாலங்களையும், (கொண்டாட்ட மகிழ்வான நாட்களையும்) குறித்தே உற்சாகமுள்ளராய் இருந்தார். தேவன் நாம் மகிழ்ச்சியாகவும், களிகூர்ந்து இருக்கவுமே விரும்புகிறார்.
- ❖ வ 23 யில் நாம் நீதியான வாழ்க்கையின் வல்லமையை காணலாம்.

நாம் பூமிக்கு உப்பாக இருக்கிறோம் உப்பு சாரமற்று போனால் அது எதினால் சாரக்கப்படும்? அது ஒன்றுக்கும் உதவாது, காலில் மிதிக்கப்படுவதற்கும், வெளியே கொட்டப்படுவதற்கும் ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நாம் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறோம். மலையின் இருக்கும் பட்டணம் மறைக்கபடமாட்டாது. மக்கள் விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்க மாட்டார்கள். ஆனால் அதை விளக்குத் தண்டின் மேல் வைப்பார்கள். அது வீட்டிலுள்ள அனைவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். அதுபோல் நம்முடைய வெளிச்சம் மனிதனுக்கு முன்பாக பிரகாசிக்கக்கடவது. அவர்கள் நம்முடைய நற்கிரியைகளை கண்டு பரலோகத்தின் பிதாவை மகிமைப்படுத்துவார்கள்.

செயல்முறை : உங்கள் வாழ்க்கையின் எந்த பகுதியில், மக்கள் கிறிஸ்துவை காண்கிறார்கள் ?

நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிராயாசப்பட்டது மில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லமலும் செய்யுங்கள் பிலி 2 : 14 – 16

## சகரியா புத்தகம் (சகரியா 9 – 10) நாள் 27

இஸ்ரவேலின் எதிரிகள் மீதான நியாயத்தீர்ப்பு (சக 9 : 1–8)

- ❖ தேவன் தம்முடைய ஜனங்களை அயலார் தேசங்களிடத்திலிருந்து பாதுகாப்பார்.
- ❖ நாம் இங்கு மறுபடியும் காண்கிறோமே எப்படி தேவன் மற்ற எல்லா நாடுகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைக்கிறார் என்பதனை.

தேவனுடைய அறிவும், அனுமதியுமின்றி எதுவும் நடைபெறாது. கிறிஸ்தவர்களாகிய நாம் வாக்குத்தத்தமான பாதுகாப்பை பெற்று இருக்கிறோம். தேவன் நம்மை பாதுகாக்கிறார். தீமை நம்மை சேதப்படுத்தாது (1 யோவான் 5 : 18)

சீயோனின் ராஜாவின் வருகை : (சகரியா 9 : 9 – 13)

- ❖ இந்த வரிகள் மேசியாவின் தீர்க்கதரிசனத்தை விவரிக்கிறது. (மத். 21 : 1–11, யோவான் 12 : 13 – 13) இது மேசியாவின் வெற்றிகரமான வருகையைப் பற்றி குறிக்கிறது.
- ❖ மேசியா சமாதானத்தை அருளுபவரும், சிறைப்பட்டவர்களை தண்ணீரில்லாத குழியிலிருந்து மீட்பவருமாக இருக்கிறார்.

மேசியா கழுதையின் மீது வருபவராய் இருக்கிறார். அவர் பணிவிடை கொள்பவராய் வராமல் பணிவிடை செய்பவராயும், திரளான மக்களுக்கு ஜீவன் தருபவராகவும் வந்தார்.



நமது இரட்சகருக்காக தேவனை மகிமைப்படுத்துவோம், நமது இராஜா சாந்தமுள்ளவராய் கழுதையின் மீது வலம் வருகிறார்.

நினைத்து பாருங்கள் நீங்கள் இந்த தீர்க்கதரிசனத்தை அந்த நாட்களில் கேட்டிருந்தால் எப்படி அதற்கு பதில் அளித்திருப்பீர்கள் ?

தேவன் காணப்பட்டார், அக்கறை கொண்டார் (சகரியா 9 : 14 – 10 : 12)

- ❖ முதல் பாகம் யூதாவின் மீட்பைப்பற்றிக் கூறுகிறது (9 :13–17) யூதர்கள், தங்களின் எதிரிகளின் மீது கொண்ட வெற்றியைப் பற்றியும் கூறியிருக்கலாம்.

அதிகாரம் – 10 மேசியாவின் தீர்க்கதரிசனத்தைப் பற்றி கூறுகிறது.

- ❖ விக்கிரக ஆராதனையும், கள்ளத் தலைவர்களும் அவர்களை அட்மைத்தன நுகத்திற்கு கொண்டு சென்றது, யூதாவின் கோத்திரத்திலிருந்து மீட்பானது மூலைக்கல்லாக ஏற்பட்டது. கிறிஸ்துவே மூலைக்கல். (ஏசாயா 23 : 16, 1 பேதுரு 2 : 6, எபேசியர் 2 : 20)
- ❖ யூதாவே மற்ற கோத்திரத்தைக்காட்டிலும் கிறிஸ்து வருவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருந்தது.
- ❖ தேவன் அவர்கள் நிலத்தை சீர்பொருத்துவதற்கு வாக்குத்தத்தம் செய்தார் (வ 6–12) இந்த வரிகள் தேவன் எப்படி தமது மந்தையை மேய்ப்பார் என்பதனை விவரிக்கிறது.

செயல்முறை : தேவனை சங்கீதம் 23 ஆம் அதிகாரத்தின் மூலம் புகழுங்கள்,

மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாமசத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்பான். நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம். கலா 6 : 7–10.

## சகரியா புத்தகம் (சகரியா 11 –12) நாள் : 28

இரண்டு மேய்ப்பர்கள் (சக 11 : 1–17)

- ❖ இந்தப் பகுதியில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசிர்வாதத்தின் புறக்கணிப்பை காணலாம்.
- ❖ இந்த புறக்கணிப்பின் பின் விளைவு இஸ்ரவேல் இறுதியில் முறியடிக்கப்படுவதும் நியாயப்பிரமாணத்தில் குறிப்பிட்டபடி யூதமதத்தின் முடிவும் ஆகும். அவர்களுடைய இறுதி அழிவு கி.பி. 70ல் ரோமர்களின் கையால் நிகழ்ந்தது.
- ❖ தேவன் அவர்களை தன்னுடைய சொந்த மந்தையைப் போல் தேற்றி அவர்களுடைய தீய மேய்ப்பர்களை சரிகட்டினார். ஆனாலும் அவர்கள் மறுபடியுமாக தேவனை புறக்கணித்தபோது அவருடைய உடன்படிக்கையை அற்றுப்போகும்படிக்கு அதை முறியடித்தார். அவர் இந்தக் கோல்களை உடைத்ததே இதற்கு அத்தாட்சி. (வ 7 – 11)
- ❖ தீர்க்கதரிசி அவர்கள்மத்தியில் அவர்களுடைய வேலைக்குத் தக்க விலையை செலுத்தும்படி கேட்டுக்கொண்டார்.
- ❖ அவர்கள் முப்பது வெள்ளிக்காசுகளை தருவதாக பதிலளித்தனர். அவர்களுடைய பதில் தேவனை அருவருப்படையச்செய்தது. இதைப் பற்றி மத்தேயு 27:9ல் இயேசுவைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு இயேசு நம்முடைய நல்ல மேய்ப்பராக இருக்கிறார். அவர் தன்னுடைய மந்தையை நன்கு அறிவார். அவைகளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே நடத்திக் கொண்டு போகிறார். நாம் அவருடைய நல்ல ஆட்டுக்குட்டியாக இருக்கிறோமோ ? நம்முடைய நல்ல மேய்ப்பருக்கு செவிகொடுத்து அவரைப் பின்பற்றக்கூடிய நல்ல ஆடாக இருக்கிறோமா ?

எருசலேமின் பகைஞர்கள் அழிக்கப்பட்டனர் (சக 12 : 1-9)

- இந்த அழிவுக்குப் பிறகு இருக்கும் எருசலேமைப்பற்றி இந்த பகுதி முன்னறிவிக்கிறது. அடிப்படையில் இயேசு கிறிஸ்துவினுடைய சபை அழியாதது என்பதைப் பற்றி காண்பிக்கிறது.
- தேவனுடைய ராஜ்ஜியத்தில் அவருடைய மக்களுக்கு எவ்வளவு வல்லமை இருக்கிறது. என்பதை கவனியுங்கள். பலவீனன் பலவானாவான் தாவீதைப் போல.
- வல்மையான தேவன் அவர்களுக்கு ஆண்டவராக இருப்பதால் மக்களும் வல்லமையாய் இருக்கிறார்கள்.
- தேவனுடைய ஆவி நமக்குள் இருந்து நம்மை வல்லமையாகவும் வெற்றிபெறச் செய்கிறதினாலும் தேவனைத் துதியுங்கள்.

அவர்களால் குத்தப்பட்டவருக்காக துக்கித்தனர். (சக 12 : 10 - 14)

- அவர்கள் குத்தினது இயேசுவையே
- அவர் குத்தப்பட்டதினால் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து கழுவப்பட்டோம் (யோவான் 19 : 37, 1 பேது 2 : 21 - 24

மெய்யாகவே அவர் நம்முடைய பாவங்களையும் துக்கங்களையும் சுமந்தார், ஆனாலும் தேவனால் அடிபட்டவரும், தாக்கப்பட்டவரும் துன்பப்பட்டவருமாய் நம்மால் கருதப்பட்டார். ஆனாலும் அவர் நம்முடைய பாவங்களுக்காக குத்தப்பட்டார், நம்முடைய அநீதியினாலே நொறுக்கப்பட்டார். இந்த தண்டனைகளே நமக்கு அவர் மூலமாக சமாதானத்தை பெற்றுத் தந்தது. அவருடைய தழும்புகளால் குணமாக்கப்பட்டோம், நாம் ஆடுகளைப் போல சிதறடிக்கப்பட்டு, நம்முடைய சொந்த வழியில் சென்றோம். தேவன் நம்முடைய பாவங்களை அவர் மேல் சுமத்தினார்.

<u>செயல்முறை :</u> நீங்கள் எப்படி சிறந்த ஆட்டுக்குட்டியாக இருக்க முடியும் என்று சிந்தியுங்கள்.

என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப்பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது (யோவான் 10 : 27 - 28 ")

---

சகரியா புத்தகம் (சகரியா 13 - 14) நாள் 29

---

பாவத்திலிருந்து கழுவப்படுதல் (சகரியா 13 : 1-9)

- நம் பாவ மன்னிப்புக்கென்று தேவ கிருபையானது நீரூற்றைப் போல அந்நாட்களில் காணப்பட்டது.
- விக்கிரக ஆராதனை, தேவனின் ஜனங்களிடமிருந்து முழுமையாக எடுத்துப்போடப்படும்.



- புதிய ஏற்பாட்டிற்கான (கிறிஸ்துவின் மூலம்) வெளிப்பாடு முழுமையாக வெளிப்பட்டதற்கும், குறிப்பிட்டதற்கும் பின்பாக தீர்க்கத்தரிசனத்தின் முழுமை நிறைவேறும்.
- மேசியாவின் குறிப்பீட்டின் பிரகாரம், மேசியா அடிக்கப்பட்டார். (வ7-9), (மத் 26-31)
- மனுஷன் தேவனுக்கு அருகாமையிலிருந்தும் (வ-7) தேவனே அவரை அடிக்கும் படியாக கட்டளையிட்டார். (அப்போஸ் 2 : 23)
- ஒரு சில ஜனங்கள் மாத்திரம் தங்களுக்கென்று கொடுக்கப்பட்ட பலியை ஏற்றுக்கொண்டனர். (வ-8) அவர்கள் அனைவரும் தேவனால் பரிசுத்தமாக்கும் நெருப்பினிடத்தில் அனுப்பப்பட்டனர்.

தேவனுடைய கிருபை நம்மிடத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீரூற்றானது, இயேசுவின் இரத்தம், அது நம்முடைய எல்லா அசுத்தத்தையும் போக்கி சுத்திகரிக்கும். இந்த பாடல் : என்னை சுத்திகரியும் நித்தியமான பாறையே எனது தங்கும் இடம், அங்கே நான் மறைந்து கொள்வேன்.

<u>தேவன் வந்து நம்மை ஆட்கொள்வார் (சகரியா 14 : 1-21)</u>

- முதலாம் பாகம் எருசலேம் நகரத்தின் அழிவை குறிக்கிறது.
- தேவன், சங்காரக்காரனை அழிப்பேன் என்று வாக்கு தத்தம் பண்ணியிருந்தார். ஆரம்பம் வசனம் 8, இந்த அதிகாரத்தின் மூலம் மேசியாவின் இராஜ்ஜியத்தில் ஆத்மீக ஆசிர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வோம் என்று நினைவு படுத்துகிறது.
- ஜீவத்தண்ணீர், எருசலேமிலிருந்து ஓடுவது (வழிவது), பரிசுத்த ஆவியில் குறிப்பீடு (வ-8) யோவான் 7 : 7
- ஒருவரே தேவன் - இராஜா (வ-9, எபே 4 : 5)
- தேவனுடைய ஜனங்களுக்கு விரோதமாக போர் புரிந்த புற ஜாதிகளும் அவர்களோடே சேரும் வாய்ப்புகள் உண்டாகும் (வ 16-13)
- முடிவாக, தீர்க்கதரிசியானவர் ஒருநாளிலே எல்லா காரியங்களும், வாழ்வின் எல்லா செயல்பாடுகளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு கீழ்ப்பட்டிருக்கும் என அறிந்திருந்தார், (வ 20,21)
- பழைய நாட்கள் கழிந்தது, புதிய நாட்கள் வந்தது.
- நாம் அனைவரும் புதிதாவதற்காக காத்திருக்கிறோம். எழுதியிருக்கிறது போல, தேவனுடைய வாசஸ்தலம் மனுஷருக்கு முன்பாக இருக்கிறது, அவர் அவர்களோடே இருப்பார். அவர்கள் அவரோட இருப்பார்கள். தேவனே அவர்களுக்கு தேவனாக இருப்பார். தேவன் அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். அங்கே அழுகையும், கண்ணீரும், மரணமும், வேதனையும் இராது, பழையன எல்லாம் முடிவு பெற்றது. சிங்காசனத்தில் வீற்றிருப்பவர் கூறியதாவது, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றது.

<u>செயல்முறை :</u> பரலோகத்தை குறித்து சிந்தித்துப்பார்த்து தேவனுக்கு நாம் நன்றி கூறுவோம். ஏனெனில் பரத்திற்கு செல்லும் வழியை நமக்கு காட்டியிருக்கிறார்.

" எழுதியிருக்கிறபடி, தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை. காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தேன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷனில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். 1 கொரி 2 : 9-11."

மல்கியாவின் புத்தகம் (மல்கியா 1 – 2 : 9) நாள் 30

<u>அறிமுகவுரை</u> :

மல்கியா என்றால் என் தூதுவன் என்று அர்த்தம். இதில் குறிப்பிட்டிருக்கும் வரலாற்று பின்னனி நெகேமியாவின் காலத்திற்கு ஒத்துப்போகிறது. ஆதலால் இதன் காலகட்டத்தை கி.மு. 445–432 என்று நாம் யூகிக்கிறோம். ஆனால் தேவாலயம் மறுபடியும் கட்டப்பட்ட பின்பு நெகேமியா சில இஸ்ரவேலர்களை மறுபடியும் கானானுக்கு கூட்டிச்சென்றார். எருசலேமின் மதில்கள் மீண்டும் கட்டப்படும்படியாக இப்படி செய்தார்.

இன்னும் தங்களுடைய பொன்னான காலம் வரவில்லையே என்று மக்கள் சலிப்படைந்ததைப்பற்றி மல்கியாவின் எழுத்துக்கள் தெரிவிக்கின்றது. இந்த சலிப்பு அவர்களுடைய தேவனுக்கான அனலை பாதித்தது. தேவனிடம் மீண்டும் அர்ப்பணித்து வாழுவதைக் குறித்து மல்கியா மக்களை தீவிரப்படுத்தினார். நிர்விசாரத்தை தங்களிடமிருந்து அகற்றி புரட்சிகரமான அர்ப்பணிப்பை தங்களுக்குள் வைத்திருக்கும்படி அவர்களுக்கு தெளிவு படுத்தினார். மல்கியாவின் தீர்க்கதரிசனங்கள் விவாதமுள்ள நடையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அல்லது இப்படி கூறலாம், தேவன் தம் எண்ணத்தை மக்களிடம் கேள்வி கேட்டு அவர்கள் பதிலளிக்கும் வகையில் அந்த கேள்விகளுக்கு தேவனே மீண்டும் பதிலளிக்கும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

<u>முதல் விவாதம் (மல்கியா 1 : 2–5)</u>

- தேவன் உரைக்கிறார் நான் உங்களைச் சிநேகித்தேன் !
- மக்களின் கேள்வி : எங்களை எப்படிச் சிநேகித்தீர்?
- தேவனின் பதில் : யாக்கோபை (இஸ்ரவேலை) சிநேகித்தேன் ஏசாவையோ (ஏதோமையோ) வெறுத்தேன் !

தேவன், தம் மக்களுக்கு யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுத்ததை நினைப்பூட்டுகிறார். இதை நாம் அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது, தேவன் யாக்கோபை சிநேகித்தார். அல்லது தெரிந்துக்கொண்டார். யாக்கோபு மற்றும் ஏசா இங்கு தனிப்பட்ட நபர்களையல்ல தேசங்களைக் குறிக்கிறது. தேவனுடைய உடன்படிக்கையை குறிக்கிறது. தேவனுடைய உடன்படிக்கையினால் உண்டான அன்பை இது காட்டுகின்றது. அவருடைய உடன்படிக்கையினால் அவரின் அன்பின் விசேஷ சின்னங்களாக அவர்கள் இருந்தார்கள்.

<u>இரண்டாம் விவாதம் (மல்கியா 1 : 6–2 : 9)</u>

- தேவன் உரைக்கிறார் : ஆசாரியர்களே ஏன் என் நாமத்தை அசட்டை பண்ணுகிறீர்கள்?
- ஆசாரியர்களின் கேள்வி : உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம் ?
- தேவனின் பதில் : அசுத்தமான அப்பத்தை படைக்கிறதினாலே
- ஆசாரியர்களின் கேள்வி : உம்மை எதனாலே அசுத்தப்படுத்தினோம் ?
- தேவனின் பதில் : கண் ஊனமான, காலூனமான, நசல்பிடித்த பலிகளை செலுத்தியதால்.

அவர்கள் இப்படியாக தங்கள் அதிபதிகளுக்கு செய்ததில்லை ஆனால் அவர்களிடம் மிஞ்சிப்போனதை தேவனுக்கு தருவதில் தவறில்லை என்று நினைத்தார்கள். பாவமுள்ள ஆராதனையை செய்வதைவிட ஆராதனை செய்யாமலிருப்பது சரி என்று தேவன் குறிப்பிட்டிருக்கிறார். இன்று நாம் எப்படி பலியிடுகிறோம்? நம் பணத்தை (பிலி 4 : 18) துதியாகிய ஸ்தேத்திர பலி (எபிரேயர் 13 : 15) மற்றவர்களுக்கு நாம் செய்யும் சேவை



<u>செயல்முறை</u> : இன்று தேவனுக்காக நீங்கள் எதை தியாகம் செய்கிறீர்கள்?

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன் ; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை – ரோ. 12 : 1

மல்கியாவின் புத்தகம் (மல்கியா 2 : 1–4 : 6) நாள் 31

<u>மூன்றாவது விவாதம் (மல் 2 : 10–16)</u>

- தேவன் உரைக்கிறார் ; அவர்கள் காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளுவதில்லை
- மக்களின் கேள்வி : ஏன்?
- தேவனின் பதில் : தங்கள் இளவயதின் மனைவிக்கு துரோகம் பண்ணின காரணத்தினால்

நம்பிக்கையை உடைப்பது எப்போதுமே தவறு ஆனால் இஸ்ரவேலர்களோ, திருமண உடன்படிக்கையை பொல்லாத வகையில் உடைத்துவிட்டனர். விக்கிரகாரதனையினால் நிறைந்த அந்நிய பெண்களை திருமணம் செய்து தங்கள் மனைவிகளை தள்ளிவிட்டனர். தள்ளிவிடுதலை வெறுக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

<u>நான்காவது விவாதம் (மல் 2 : 17 – 3 : 5)</u>

- தேவன் உரைக்கிறார் ; நீங்கள் என்னை வருத்தப்படுத்தினீர்கள்
- மக்களின் கேள்வி : எதினால்?
- தேவனின் பதில் : பொல்லாப்பை செய்கிறவர்கள் செழிப்பார்கள் என்று நினைத்ததினால்

தேவன் தம்முடைய வருகையைக் குறித்து தம் மக்களுக்கு நினைப்பூட்டுகிறார். கர்த்தர் தம் நாளில் வரும்போது எல்லா கோணலானவைகளை நேராக்கி, நீதிமான்களுக்கு பலனளித்து துன்மார்க்கரையோ தண்டிப்பார். துன்மார்க்கருக்கும் நீதிமான்களுக்கும் வித்தியாசம் இருக்கும் ! சேவித்தவர்களுக்கும் சேவிக்காதவர்களுக்கும் வித்தியாசம் இருக்கும் !

<u>ஐந்தாவது விவாதம் (மல் 3 : 6 – 12)</u>

- தேவன் உரைக்கின்றார் ; தேவனித்தில் திரும்புங்கள்
- மக்கள் கேள்வி : எவ்வாறு?
- தேவன் உரைக்கிறார்? ; நீங்கள் தேவனை வஞ்சிக்கிறீர்கள்
- மக்கள் கேள்வி : எவ்வாறு?
- தேவனின் பதில் : தசமபாகங்களிலும், காணிக்கைகளினாலும்

தேவன் அவர்களுடைய மனப்பான்மையை பார்த்தார். அவர்களுடைய மதம் களிகூர்வதாக இல்லாமல் விட்டு விலகுவதாகவும், ஆசீர்வாதமாக இராமல் பாரமாகவும், இரட்சிப்பாக இல்லாமல் பலியிடுவதாகவும், ஒளியூட்டுவதாக இல்லாமல் அறியாமையாகவும் இருந்தது !

<u>ஆறாம் விவாதம் (மல் 3 : 13 – 4 : 6)</u>

- தேவன் உரைக்கிறார் ; எனக்கு எதிராய் பேசினீர்கள்
- மக்கள் கேள்வி : எவ்வாறு?
- தேவனின் பதில் : தேவனை ஆராதிப்பது வீண் என்று சொன்னதினால்

அவர் துன்மார்க்கரை தண்டித்து உண்மையுள்ளவர்களுக்கு பலனளிக்கிறார். மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி தேவன் அழைப்பு விடுத்தார் (மல்கியா 4 : 4) மற்றும் கர்த்தருடைய நாமத்திற்கு முன்பாக எலியாவின் வருகையிருக்கும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது (4 : 5-6)

செயல்முறை : உங்கள் கிறிஸ்துவ வாழ்க்கை பாரமாக எண்ணுகிறீர்களா? ஆம் என்றால் எதனால் ?

நாம் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாம் ; அவருடைய கற்பனைகள் பாராமானவைகளும் அல்ல. தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் ; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் – 1 யோவா 5 : 3-4



## மேசியாவின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் (இளைய தீர்க்கதரிசிகள்)

| புத்தகம் | வசனம் | தீர்க்கதரிசனம் | புஏ நிறைவேற்றம் |
|---|---|---|---|
| ஓசியா | 11 : 1<br>13 : 14 | தேவன் தன்னுடைய குமாரனான (மேசியா)வை எகிப்திலிருந்து வரவழைப்பார்<br>மேசியா மரணத்தையும் பாவத்தையும் மேற்கொள்வார் | மத் 2 : 13 - 15<br>1 கொரி 15:55-57 |
| யோவேல் | 2 : 32 | மேசியா எல்லா மனித ஜாதிக்கும் இரட்சிப்பை அருள்வார். | ரோம 10:12-13 |
| ஆமோஸ் | 8 : 9 | இயேசுவை சிலுவையிலறையும்போது ஆகாயத்தை அந்தகாரப் படுத்துவார். | மத் 27:45-46 |
| | 5 : 1<br>5 : 2 அ | மேசியா அவருடைய சோதனையின் தருவாயில் முகத்தில் அறையப்படுவார்.<br>மேசியா பெத்லகேம் என்னும் பட்டணத்தில் பிறப்பார். | மத் 27:30<br>மத் 2:1-2 |
| | 5 : 2 ஆ | மேசியா யூதாவின் மரபு வழியிலே வருவார் | லூக் 3:23-33 |
| | 5 : 2 இ | மேசியா அநாதி நாட்களாய் இருப்பார். | வெளி 1 : 8 |
| ஆகாய் | 2 : 6-9 | மேசியா இரண்டாவது ஆலயத்திற்கு செல்வார் | லூக் 2:27-32 |
| | 2 : 23 | மேசியா செருபாபேலின் மரபு வழியிலே வருவார். | லூக் 3:23-27 |
| சகரியா | 2 : 10-11அ | மேசியா தாமே தேவனாயிருந்து தமது மக்களின் மத்தியில் வாசம் பண்ணுவார். | யோவா 1:14 |
| | 2 : 10-11ஆ | மேசியா தேவனால் அனுப்பப்படுவார் | யோவா 8:18-19 |
| | 3 : 8 அ | மேசியா செருபாபேலின் மரபு வழியிலே வருவார் | லூக் 3:23-27 |
| | 3 : 8 ஆ | மேசியா தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர் | யோவா 17 : 4 |
| | 6 : 12-13 | மேசியாவே பிரதான ஆசாரியராகவும் ராஜாவாகவும் இருப்பார் | எபி 8:1/ரோம 8:10 |
| | 9 : 9 அ | மேசியா எருசலேமிற்குள் பிரவேசிக்கும் போது சந்தோஷத்துடன் கூடிய வரவேற்பை அளிப்பார்கள் | மத் 21:8-10 |
| | 9 : 9 ஆ | மேசியா ஒரு இராஜாவைப் போல் காட்சியளிப்பார் | யோவா 12:12-13 |
| | 9 : 9 இ | மேசியா நீதியுள்ளவரும் மேன்மையானவருமாய் இருப்பார் | யோவா 5:30 |

| புத்தகம் | வசனம் | தீர்க்கதரிசனம் | புஏ நிறைவேற்றம் |
|---|---|---|---|
| சகரியா | 9 : 9 ஈ | மேசியா எல்லா மனித ஜாதிக்கும் இரட்சிப்பை கொண்டுவருவார் | லூக் 19 : 10 |
| | 9 : 9 உ | மேசியா ஆவியில் எளிமையுள்ளவராயிருப்பார் | தீத்து 2 : 11 |
| | 9 : 9 ஊ | மேசியா எருசலேமிற்குள் கழுதையின் மேல் வருகிறவருமாயிருக்கிறார் | மத் 11:29/யோவா 13:4-14 |
| | 10 : 4 | மேசியா மூலைக்கல்லாயிருப்பார் | மத் 21 : 6-9 |
| | 11 : 10 | மேசியாவை இஸ்ரவேல் புறக்கணித்த காரணத்தினால் தேவன் அவர்களுடைய பாதுகாப்பை அவர்களிடத்திலிருந்து (யூதர்கள்) நீக்கவேண்டியதாயிருக்கும் | எபே 2 : 20 |
| | 11 : 12 | மேசியாவை யூதாஸ் முப்பது வெள்ளிக்காசிற்காக காட்டிக்கொடுக்க நேரிடும் | மத் 26:14-15 |
| | 11 : 13 அ | முப்பது வெள்ளிக்காசை ஆலயத்தில் எறிந்து விட நேரிடும் | மத் 27 : 3-5 |
| | 11 : 13 ஆ | முப்பது வெள்ளிக்காசைக் கொண்டு குயவனுடைய நிலத்தைக் கொள்வார்கள் | மத் 27 : 6-7 |
| | 12 : 10 | மேசியாவின் சரீரம் குத்தப்படும் (இரத்தமும் / தண்ணீரும் புறப்பட்டது) | யோவா 19 : 34 |
| | 13 : 7 அ | மேசியா தேவனுக்கு சமமானவர் | யோவா 14:9 |
| | 13 : 7 ஆ | மேசியாவின் மரணத்திற்கு பிறகு சீடர்கள் சிதறிப்போவார்கள் | மத் 26 : 31-56 |
| மல்கியா | 3 : 1 அ | மேசியாவிற்கு தூதனானவர் (யோவன் ஸ்நானன்) வழியை ஆயத்தப்படுத்துவார் | மத் 11 : 10 |
| | 3 : 1 ஆ | மேசியா யூதர்களின் ஆலயத்தில் சடுதியில் தரிசனமாவார் | மத் 11 : 15-16 |
| | 3 : 1 இ | மேசியா புதிய உடன்படிக்கையை தெரியப்படுத்துவார் | லூக் 4 : 43 |
| | 4 : 5 | எலியாவின் ஆவியைக் கொண்ட (யோவான் ஸ்நானன்) மனுஷன் மேசியாவின் வருகையை அறிவிப்பார் | மத் 3 : 1-2<br>மத் 11 : 13 - 14 |
| | 4 : 6 | மேசியாவின் அறிவிப்பாளர், அநேகரை தேவன் பக்கமாக திருப்புவார் | லூக் 1:16-17/மாற்கு 1:3-5 |